# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 07 செவ்வாய்க்கிழமை [24-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 232


# புலிகள் பிரதேசத்திலிருந்து 600 பேர் வவுனியா வருகை

## 2 மாதங்களின் பின்

வவுனியா, ஓகஸ்ட் 24

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இடையிலான — உயிலங்குளம் ஊடான — பாதை தடைப்பட்டு சுமார் 2 மாத காலத்தின் பின் நேற்று முதல்தடவையாக மாங்குளம் பாதை ஊடாக 600 பொதுமக்கள் புலிகளின் பிரதேசத்தில் இருந்து வவுனியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து புலிகளின் பகுதிக்குச் சென்று திரும்பி வரமுடியாமல் இருந்த அரசாங்க ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் நோயாளர்கள் ஆகியோரே நேற்று மாங்குளம் பாதை ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர்.

கடந்த 9 ஆம் திகதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் துணையுடன் மாங்குளம் பாதை ஊடான போக்குவரத்து ஆரம்பமானது.

புலிகள் பிரதேசத்திலிருந்து வந்து திரும்பிச் செல்ல முடியாமல் வவுனியாவில் தங்கி இருந்த சுமார் 3 ஆயிரம் பேர் இப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து அதனூடாக புலிகளின் பிரதேசத்துக்குச்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## இருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 24

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த இருவர் காணாமல்போய் விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைபாடு செய்யப்பட்டுள்ளது

கற்கோவளம் — பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பொன்ராசா (வயது 50) என்பவர் கடந்த ஜூன

[12 ஆம் பக்கம் பார்க்க]

## மீளக் குடியமர அனுமதி

வவுனியா, ஓக. 24

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை மூலம் படையினரால் மீட்கப்பட்ட நொச்சிமோட்டை, பேயாடிகூளாங் குளம் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓமந்தையில் இருந்து மாங்குளம் வரையான பகுதிகளை

[12 ஆம் பக்கம் பார்க்க]

## பரந்தனில் பலியான 2 சிப்பாய்களின் சடலங்களை புலிகள் ஒப்படைத்தனர்

வவுனியா, ஓக. 24

பரந்தன் — ஆனையிறவு முகாம்களில் இருந்து இரு முனைகளில் சுட்டபுரம் பகுதியை நோக்கி முன்னேற முபன்ற படையினருக்கும் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்றமோதலில் உயிரிழந்த இரு படையினரின் சடலங்கள் நேற்று புலிகளால் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் படையினரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த மோதலில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்ததாகவும் —

ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் அறிவித்தனர்.

நல்லெழில (மகாவேந்தன் ராஜ்குமார் யாழ்ப்பாணம்), ஓவியன் (தங்கமுத்து பாலச்சந்திரன் — யாழ்ப்பாணம்) ஆகியோரே உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதே வேளை —

பரந்தன் பகுதியில் புலிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 3 படையினர் உயிரிழந்ததாகவும் ஏழுபடையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்புத் தரப்பு அறிவித்துள்ளது.

அதே சமயம் — கடந்த 20

[12 ஆம் பக்கம் பார்க்க]

## 50 கலிபர் துப்பாக்கியின் அறுபது ரவைகள் மீட்பு!

### கோப்ரலின் வீட்டிலிருந்து

மட்டக்களப்பு ஓக. 24

வெலிஓயா இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவ கோப்ரல் ஒருவரின், கம்பளையில் உள்ள வீட்டை நேற்று நண்பகல் சோதனையிட்ட பொலீஸார் அங்கிருந்து 62 விமான எதிர்ப்புத் துப்பாக்கிக்கான ரவைகளை மீட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி பெரஹரா நிகழ்ச்சிகளை முன்னிட்டு நேற்றுக்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## குண்டு செயலிழப்புப் பொலீஸார் கொழும்பில் 24 மணி நேர ரோந்து

கொழும்பு, ஓக. 24

கொழும்பு நகருக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நகரில் குண்டு செயலிழக்கச் செய்யும் பொலீஸார் 24 மணி நேர ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்புப் பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் ரி. என். ரி. சில்வா இத்தகவலைத் தெரிவித்தார்.

தலைநகரில் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதை அடுத்து அந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

பொலீஸார் 24 மணிநேர ரோந்தில் ஈடுபட்டுள்ளதாகவும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள மின் மாற்றிகளுக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## யாருடைய போரையோ நடத்த இலங்கைக்கு இந்தியப் படை

### காங்கிரஸ் மீது வாஜ்பாய் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஓக. 24

யாரோ ஒருவருடைய போரை நடத்துவதற்காக காங்கிரஸ் அரசு இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பியது.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

குஜராத் மாநிலத்தின் சுரேந்திர நகரில் நேற்றுஇடம்பெற்ற பொதுக் கூட்டம்ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''கார்கிலில் இந்திய இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைக்கும் இலங்கையில் தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக காங்கிரஸ் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன — என்றும் அவர் தெரிவித்தார். (உ-6)

## ஆறுபேரைச் சுட்டுக் கொன்ற ஊர்காவலர் பின் தற்கொலை!

### பதவியாவில் நேற்றுப் பரிதாபம்

கொழும்பு. ஓக. 24

பதவியாப் பகுதியில் ஊர்காவலர் ஒருவர் 6 பொது மக்களைச் சுட்டுக்கொன்றுவிட்டு தன்னைத்தானே சுட்டு தற்கொலைசெய்துகொண்டார்.

பி. ஜி. சரத் என்ற இந்த ஊர்காவலர் நேற்றுக் காலை தனது காதலி வீட்டுக்குச் சென்று அங்கு காதலியின் குடும்பத்தவருடன் சச்சரவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனை அடுத்து அங்கு வந்த அயல் வீட்டுக்காரர்களை நோக்கி தனது கையில் இருந்த தானியங்கித் துப்பாக்கியால் இவர் சுட்டதாகவும்—

இதனால் ஐந்து வயதுக்

[12 ஆம் பககம் பார்க்க]

## 1,200 பயணிகளுடன் கப்பல் நாளை வரும்

### அவர்களில் 270 பேர் அகதிகள்

யாழ்ப்பாணம், ஓக. 24

திருகோணமலையில் இருந்து 'லங்கா முடித்த' கப்பல் ஆயிரத்து 200 பயணிகளுடன் நாளை காங்கேசன் துறை வரவிருக்கின்றது.

இந்தக் கப்பலில் வருபவர்களில் 270 பேர் இடம்பெயர்ந்து சென்ற அகதிகளாவர். இவர்கள் காங்கேசன்துறையில் தங்க வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு பின்னர் யாழ். வர அனுமதிக்கப்படுவர் என்றும்—

ஏனையோர் உடனடியாக யாழ்ப்பாணம் அனுப்பப்படுவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

[12 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டு. பொலீஸ் நிலைய எல்லையில்குண்டுவெடிப்பு

மட்டக்களப்பு, ஓக. 24

மட்டக்களப்பு பொலீஸ் நிலையப் பகுதியில் நேற்றுக் காலை குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் படைத் தரப்பை அதிர்ச்சி அடைய வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸ் நிலைய எல்லைப்புற பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருந்த — மண் நிரப்பப்பட்ட — பரல்களில் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த — நேரம் கணித்து வெடிக்கும் —

[12ஆம் பக்கம் பார்க்க]

## தாயும் மகளும் காயம

மட்டக்களப்பு, ஓக. 24

மட்டக்களப்பு காவத்தை முனையில் நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்கள் ஒரு வீட்டிற்குள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தாயும் 8 வயது மகளும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ-6-21)

## 4 ஆம் திகதி வரைக்கும் விமான டிக்கெட் இல்லை

### சிவில் நிர்வாக அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு விமானம் மூலம் செல்லும் பயணிகளுக்கு எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு பின்பே பயணம் செய்ய வசதி அளிக்க முடியும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய டிக்கெட்டுக்கள் யாவும் விற்பனை செய்யப்பட்டுவிட்டன என்றும்—

அதுவரை விமானத்தில் பயணம் செய்ய இடமில்லை என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில்

[12 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

முள்ளியான்

## மண்டலாய் சித்திவிநாயகர் மணவாளக்கோல அபிஷேகம்

நிகழும் பிரமாதி வருடம் ஆவணி மாதம் 12 ஆம் நாள் (29 – 08 – 1999) ஞாயிற்றுக்கிழமை புலோலி மேற்கு வத்தனைப் பிள்ளையார் கோயிலில் கோயில் கொண்டிருக்கும்

மண்டலாய் சித்திவிநாயகருக்கு அபிஷேகமும் விசேட பூசையும் சிறப்பாக நிகழவுள்ளது.

இந்த அபிஷேகத்தில் பங்கு கொள்ளும் அடியார்கள் வத்தனைப் பிள்ளையார் கோயில் குருக்களுடன் மூன்று நாள்களுக்கு முன்பாக தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இ. மண்டலேஸ்வர ஐயர்

வத்தனை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(68434)

## தேவை

மேனகா அச்சகத்திற்கு

ஒப்பு நோக்குநர் (PROOF READER)

பதவிக்கு ஒப்பு நோக்குதல்—ஓடர் பெற்றுக் கொள்ளல் போன்ற வேலைகளில் 4 வருட அனுபவமுடைய ஆண் தேவை. தகுதியானவர் எமது அச்சகத்திற்கு உடன் சமுகமளிக்கவும்.

340, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(68442)

## வாழ்த்துகின்றோம்

இன்று முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
பருத்தித்துறை

**ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்**

மேலும் சிறப்புற வளர
எமது இதய பூர்வமான நல்வாழ்த்துக்கள்!

**கனன் போட்டோ கொப்பியிங் சேவிஸ்**

இலங்கை வங்கி அருகில்
பருத்தித்துறை.

(சி/8615)

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை இறங்குதுறைப் பொறுப்பாளர்
திரு சிவலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னையா இராமநாதன்**

20–08–1999 அன்று காலமானதையிட்டு அவரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

பருத்தித்துறை கரைப்பகுதி
இறங்குதுறை தொழிலாளர்குழு.

[சி/8616]

## திருக்கல்யாணம்

யாழ்ப்பாணம், ஒக. 24

கோண்டாவில் அன்னங்கை ஸ்ரீ மனோன்மணி அம்பாள் சமேத சிவபூதவராயர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6 மணி முதல் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு திருக்கல்யாணம் இடம்பெறும். (உ–7)

## தொலைக்கல்வி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக. 24

ஆசிரியர் தொலைக்கல்வி கற்கை நெறியின் இறுதிப் பரீட்சைகள் இம்மாதம் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்களை யாழ்.வலயக் கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பரீட்சைக்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுமாறும்— வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ–7)

**நாகம்ஸ்**
**சுன்னாகம்**
இன்று
காதல் இளவரசன் விஜய்
தேவயானி, ரம்பா
மணிவண்ணன் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
காட்சிகள் 11.00, 2.30
/ புதிய நேரம் /
(68392)

**ராஜா**
**யாழ்ப்பாணம்**
பிரசாந்த் – ஐஸ்வர்யா
நாசர் நடித்த
**ஜீன்ஸ்**
10-30, 2–30
(புதிய நேரம்)
(இ/8561)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
விஜய்
நடித்த
**ரசிகன்**
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2–30
(68360)

## கொக்குவில் மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஒக. 24

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை இடம்பெறுவதை முன்னிட்டு கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆகியன மூன்றாம் தவணைக்காக அன்றைய தினம் ஆரம்பமாக மாட்டா. இப்பாடசாலைகள் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமையே ஆரம்பமாகும் என சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் அறிவித்துள்ளனர். (உ–7)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை நாகலிங்கம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகலிங்கம் அவர்கள் 23-8-99 திங்கட்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் நா. வேலாயுதபிள்ளை (ஆசிரியர், யா/திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை) அவர்களின் அன்புத் தந்தையும் திருமதி வே. சற்குணபூபதியின் அன்பு மாமனாரும் செல்வி வே. கலைச்செல்வி (மாணவி, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்) செல்வி வே. சுவித்தா (பொறியியல் மாணவி), செல்வன் வே. சுதர்சன் (A/L 2001, உயிரியல் மாணவன், யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனாரும் வ. நடராசா (கோப்பாய் தெற்கு) அவர்களின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-8-99) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இருபாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
நா. வேலாயுதபிள்ளை
(மகன்)

பெரிய ஒழுங்கை,
பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(68443)

## தொம்மைப்பிள்ளை அருளப்பு

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய தொம்மைப்பிள்ளை — அருளப்பு 22 – 08 – 1999 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அருளப்பு திரேசம்மாவின் அன்புக் கணவரும், மேரி யூபிரேசியா (ராணி), பிரான்சிஸ் சேவியர் (டென்மார்க்), அன்ரன் ஜோசப் (பாபு—டென்மார்க்), மேரி விற்றுவா (ரஞ்சினி), மேரி மாகிரட் (ஜெயமணி—பிரான்ஸ்), மேரி மக்டலீன் (லீலா), மேரி செலின் (இத்தாலி), மேரி பற்றீசியா (கமலா — இத்தாலி), டொன் பொஸ்கோ (டென்மார்க்), மேரி லூட்ஸ் பொலின் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25 – 08 – 99 நாளை புதன்கிழமை பிற்பகல் 4.00 மணி அளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இருந்து நல்லடக்கத்திற்காக கனத்தை கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

26 – 08 – 99 வியாழக்கிழமை யாழ். அடைக்கல மாதா கோயிலில் காலை 8.00 மணிக்கு நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்தித் திருப்பலியிலும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
J, A. மேரி மெக்டலீன் (லீலா)

இல. 16 மாட்டீன் றோட்,
யாழ்ப்பாணம்.

(68441)

## திருமதி கந்தையா பர்வதம்
(சின்னம்மா)
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த கந்தையா பர்வதம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்கள் 22- 08- 99 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா கந்தையா (முன்னாள் அதிபர், கைதடி விக்னேஸ்வரா) அவர்களின் அன்பு மனைவியும், திருச்செந்தூர்நாதன் (U. K), சகுந்தலாதேவி, கமலநாதன் (U. K) ஆகியோரின் அன்புத்தாயாரும் புஷ்பராணி (சாவகச்சேரி) யின் அன்பு ஆசைஅம்மாவும், சியாமளா (U. K), தர்மராசா (தொழில் அதிகாரி, வவுனியா), யோகேஸ்வரி (U. K), சண்முகசுந்தரம் ஆகியோரின் மாமியாரும், கேதீஸ் (U. K), குமரேஷ் (U. K), கஜன் (U K), கார்த்திகா (U. K) காயத்திரி, திருவரன் (பொறியியல் பீடமாணவன், பேராதனை), மாலதி, கலாயினி (U. K), சரவணபவன் (பிரான்ஸ்), மாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி புஸ்பராணி
சண்முகசுந்தரம்

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(சி/8618)

## திரு வீடியோ விஷன்

**கலர் போட்டோகிறாபி & கலர் லாப்**

**யாழ். மாவட்ட புகைப்படப்பிடிப்பாளர்களுக்கான**

**அன்பான வேண்டுகோள்**

எமது யாழ். மாவட்ட ஏக முகவராக

**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ (சந்திரன்)**

ஸ்தாபனத்தை நியமித்துள்ளோம் என்பதனைப் பெருமையுடன் அறியத் தருகின்றோம்.

உங்கள் புகைப்படச் சுருள்களை கணனி தொழில் நுட்பத்தில்
கொழும்பு ஆய்வு கூடங்களின் தரத்தில்

**ஒரு நாளில் அல்லது இரண்டு நாள்களில்**

பிரதியாக்கம் செய்திட நாடுங்கள்.

**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ**

545, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(68437)

புலோலி தெற்கு,
புலோலி,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். படைகள் தலிபானுடன் செயற்படுவதாகக் குற்றச்சாட்டு

## ரஷ்யா தெரிவிப்பு

மாஸ்கோ, ஓக. 24
ஆப்கானிஸ்தானில் தலிபான் படையணியுடன் இணைந்து இயங்க பாகிஸ்தான் தனது படைகளை அனுப்பியுள்ளதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

மாஸ்கோவில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளை ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அழைத்து நேரடியாக இந்த விவரேத்தைத் தெரிவித்துள்ளது.

ரஷ்யா தெரிவித்துள்ள இந்தக் குற்றச்சாட்டை பாகிஸ்தான் முழுமையாக மறுத்துள்ளது.

இதே நேரம்—

அண்மையில் தலிபான் படைகளுக்கும் எதிரணிப் படைகளுக்கும் இடையில் நடந்த சண்டையில் ஒன்பது பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழந்தனர் என்றும் —

அவர்கள் தொடர்பான விவரங்களை ஈரான் வெளியிட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்கள் பாகிஸ்தான் படைகளில் முன்னர் பணிபுரிந்தவர்கள் எனப் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. (ஐ-3)

உலக அரங்கில்

## பாகிஸ்தான் யுத்த டாங்கி தயாரிப்பு

இஸ்லாமாபாத், ஓக. 24
சீனாவின் உதவியுடன் பாகிஸ்தான் யுத்த டாங்கிகளை உற்பத்தி செய்யவுள்ளது.

இஸ்லாமாபாத்துக்கு 30 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஆயுதத் தொழிற்சாலையிலேயே இந்த டாங்கிகள் உற்பத்தி செய்யப்பட உள்ளன. (ஐ-க)


## Institute of Informatics Studies

**Jaffna, Sri Lanka.**
Affiliated with IMIS, UK.
Telephone: 021-2831 E-Mail: iis@sltnet. lk

# COMPUTER COURSES

**New Batches Commence on 5th September 99**

- NEXT MILLENNIUM APPROACH
- INFORMATION AGE TECHNOLOGY

Diploma Courses:

| | COURSE | DURATION IN MONTHS |
|---|---|---|
| 1. | Advanced Diploma in Applied Computer Science | 12 |
| 2. | Diploma in Computer Programming | 8 |
| 3. | Technician Diploma in Computer Hardware | 6 |
| 4. | Diploma in Microsoft Office 2000 | 4 |

Certificate Courses

| COURSE | DURATION | COURSE | DURATION |
|---|---|---|---|
| WINDOWS 98/2000/NT | | C/C++ | 5 |
| MS WORD 2000 | 4 | PASCAL | 4 |
| MS EXCEL 2000 | 4 | AUTO CAD | 4 |
| MS ACCESS 2000 | 4 | PAGE MAKER | 3 |
| MS POWER POINT 2000 | 2 | COREL DRAW | 3 |
| VISUAL BASIC | 5 | dBASE | 3 |

All Students who join these course will be trained in the operation of
**Internet and E-Mail**

- Students who have received Scholarship awards. for the year 99, are requested to enrol immediately.
- The Course fees could be paid in instalments.
- Students are afforded. maximum facilities for utilizing the Lab and Library.
- Our students will benefit by getting the Internet and E-Mail services at reduced rates.

**For further particulars contact.....**

**The Head Office:**
IIS, 100, Clock Tower Road, Jaffna.

**Branches:**
IIS, Navalar Madam, Nelliyady.
IIS, ' Circle Centre", Chankanai.
IIS, Nunavil. East, Chavakachcheri.

குறிப்பு: இது தொடர்பாக நேற்று வெளியான ... (Crest) தவறுதலாக மாறி பிரசுரிக்கப்பட்டு ...
(c/8608)


# வன்செயல்கள் மூண்டால் ராணுவம் அழைக்கப்படும்

சென்னை, ஓக. 24
தேர்தல் காலங்களில் தமிழ்நாட்டில் வன்முறைச்சம்பவங்கள் இடம் பெறும் பட்சத்தில் இராணுவம் பணிக்கு அழைக்கப்படும் என்று தி.மு.க தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் இராணுவ உதவி உடனடியாகப் பெறப்பட வேண்டும் என த.மா.கா தலைவர் மூப்பனார் கோரியிருந்தமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை —

தமிழ் நாட்டில் பாகிஸ்தான் உளவாளிகள் ஊடுருவி உள்ளனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கருணாநிதி மேலும் தெரிவித்தார். [ஐ-க]

## அல்ஜீரியாவில் குண்டு வெடிப்பில் 17 பேர் பலி

அல்ஜியர்ஸ், ஓக. 24
அல்ஜீரியாவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 17 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேர் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் அல்ஜியர்ஸுக்குத் தெற்கே 120 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அல்பேறா நகரில் மதக் கொண்டாட்டம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது.

இறந்தவர்களில் அதிகமானோர் குழந்தைகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-க)

## இன்ரநெற்றில் திருட்டு

இன்ரநெற் திருட்டுத் தொடர்பாக அமெரிக்காவில் ஒரு கல்லூரி மாணவருக்கு நீதிமன்றம தண்டனை வழங்கவுள்ளது

அமெரிக்காவில் 1997 இல் கொண்டு வரப்பட்ட சட்டத்தின் கீழ் இன்ரநெற் திருட்டு தொடர்பாக குற்றம் நிருபிக்கப்பட்ட முதல் நபர் இவர்தான். மூன்றாண்டுகள் வரை இவருக்குச் சிறைத்தண்டனை வழங்கப்படலாம்.

போட்லாந்து பூஜீன் நகரில் ஒரேகான் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ஜெப்ரி லெவி [22 வயது] என்னும் மாணவனே இன்ரநெற்றில் திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்டார் [ஐ-ரி]

விழுப்புரம் பிரசாரக் கூட்டத்தில்

# சோனியாவை 45 நிமிடங்கள் காக்க வைத்த ஜெயலலிதா!

சென்னை, ஓக. 24
எதிர்வரும் தேர்தலில் காங்கிரஸும் அ.தி.மு.கவும் கூட்டணி அமைத்த பின்னர் தமிழ் நாட்டின் விழுப்புரத்தில் நடைபெற்ற முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் 45 நிமிடங்கள் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை காத்திருக்க வைத்தார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா.

விழுப்புரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சோனியா காந்தியும், ஜெயலலிதாவும் உரையாற்ற ஏற்பாடாகியிருந்தது. அது தொடர்பாக அறிவித்தலும் விடுக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பெரும் எண்ணிக்கையில்மக்கள் அங்கு கூடியிருந்தனர்

சோனியாகாந்தி குறிப்பிட்ட நேரத்தில் அங்கு பிரசன்னமானார். ஜெயலலிதா வருகைக்காக அவர் அங்கு சுமார் 45 நிமிட நேரத்துக்கு மேல் காத்திருந்த போதிலும் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜெயலலிதா வரமாட்டார் என கடைசியில் அறிவிப்பு வந்தது.

அதனைத் தொடர்ந்து கூட்டத்துக்கு வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வெளியேறினர் பின்னர் சோனியா பாரதீய ஜனதாக் கூட்டணிக் கட்சியைச் சாடி உரையாற்றினார். (ஐ-க)

## தாமரைக்கனிக்கு கொலைப் பயமுறுத்தல்

சென்னை, ஓக. 24
அ.தி.மு.கவின் முன்னாள் உறுப்பினர் தாமரைக்கனிக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.கவின் நீண்டகால உறுப்பினரான தாமரைக்கனிகு தேர்தலில் எந்தத் தொகுதியும் ஒதுக்கப்படவில்லை இதனால் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட அவர் முடிவு செய்திருந்தார். தேர்தல் பிரசாரங்களின் போது அ.தி.மு.க வையும் மற்றும் ஜெயலலிதாவையும் அவர் கடுமையாக விமர்சித்து பேசி வருகிறார். இதனைத் தொடர்ந்தே தாமரைக் கனிக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலீஸார் அவருக்குப் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். [ஐ-க]

# பாகிஸ்தான் தூதரகம் மீது ஈரானில் தாக்குதல்

தெஹ்ரான், ஓக. 24
ஈரானில் உள்ள பாகிஸ்தான் நாட்டு தூதரகம் இனந்தெரியாத மூன்று துப்பாக்கி நபர்களினால் நேற்று முன்தினம் தாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றுமொரு பொலீஸார் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். தூதரகத்துக்கு செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர் சிலரும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் உடனடியாக விஷேட தூதுக்குழு ஒன்றை தெஹ்ரானுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் படைக்கு ஆதரவாக பாகிஸ்தான் செயற்பட்டு வருவதைக் கண்டிக்கும் வகையிலேயே மேற்படி சம்பவம் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை —

தலிபானுக்கு எதிரான அஹமது ஷா மசூத்தின் படையணிக்கு ஈரான் உதவி வழங்கி வருவது தெரிந்ததே. (ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேசம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கல்லூரி வீதி, இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட அல்பிரெட் யோசேப் அனட் புளோரிடா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 616522639 V, விசேட அடையாள அட்டை 090500042 உடுவிலுக்கும் இளவாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். (68416)

பிராமனோடை கோப்பாய் வடக்கைச் சேர்ந்த லோகேஸ்வரன் திருமாறன் என்பவரது 0903036986 இலக்க விசேட அடையாள அட்டை 17 - 08 - 99 அன்று கோண்டாவிலுக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கில் ஒப்படைக்கவும். [சி/8609]

### தேவை

கோழிகள், ஆடுகள் பார்ப்பதற்கு ஒரு ஆள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும் தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] முத்திரைச் சந்தையடி, நல்லூர். [68421]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சிறுகதைத் தொகுதியின் விமர்சனத்தை உதயனில் வாசித்தீர்களா? பல்வேறு சுவைகளும் விரவி நிற்கின்ற யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கூறுகின்ற அந்தப் பத்துச் சிறுகதைகளையும் வாசித்துப் பாருங்களேன். ரூபா – 50, [68426]

## நீர்க்குழாய்கள் திருத்தம்

கொழும்புத்துறை, ஒக. 24

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தண்ணீர்தாங்கியின் கிழக்குப் பக்கமாகவுள்ள கொழும்புத்துறை மேற்கு, கொழும்புத்துறை கிழக்கு, எழிலூர் போன்ற இடங்களிலுள்ள நீர் விநியோக குழாய்கள் தற்போது திருத்தம் செய்யப்பட்டு பொது நீர்க்கம்பங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நீர் விநியோகப் பாதை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது [ஐ–30]

## வாடகைக்கு

257/2, 1 ஆவது மாடி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி விலாசத்தில் அமைந்துள்ள மேல் மாடிக் கட்டடத்தில் இரு மண்டபங்கள் வாடகைக்குக் கொடுக்கப்படும். விரும்புவோர் கிழமை நாள்களில் காலை 10 00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் இடையில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நன்றி.

நிர்வாகச் செயலாளர்.

(68425)

## நன்றி நவில்கின்றோம்

காலஞ்சென்ற எமது அன்புத் தந்தை

### சின்னையா இராமநாதன்

அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவரிற்கு வைத்திய சேவைகளை வழங்கிய வைத்திய கலாநிதி அல்வாயூர் வேலும்மயிலும் அவர்களுக்கும், வெளிநாடுகளில் இருக்கும் எமது உடன் பிறப்புக்களுடன் தொடர்பு கொண்டு செய்திகளைப் பரிமாற உதவி புரிந்த துன்னாலையூர் 'றோயல் கொம்மியூனிக்கேசன்' உரிமையாளர் தம்பி நக்கீரன் அவர்களுக்கும், எமது அன்புத் தெய்வத்தின் மறைவின் பின்னர் துண்டுப்பிரசுரங்கள் மூலமும், மலர் வளையம் சாத்தியும் தமது அனுதாபங்களையும் தெரிவித்த அன்பர்கள், வேண்டிய போதெல்லாம் உதவியாக நின்ற பரு. இறங்குதுறை ஊழியர்கள், மரண அறிவித்தலைக் குறுகிய நேர முன்னறிவித்தலோடு பிரசுரித்து உதவிய ''உதயன்'' பத்திரிகை ஆசிரியர், ஊழியர் குழாம் யாவர்க்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

தகவல்
இரா. சிவலிங்கம்.

பரு/இறங்குதுறை. (சி/8614)

## வாழ்த்துக்கள்

▼▼▼▼▼▼▼▼

பருத்திநகர்

### ஜெயகணேசா ஸ்தாபனத்தின் முதலாம் ஆண்டுநிறைவு நாள்

24 – 08 – 99 இல் முதலாம் ஆண்டினை நிறைவு செய்யும் இந்நன்னாளில்

ஜெயகணேசா ஸ்தாபனத்தினருக்கு

எமது உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆண்டுக்கு ஆண்டு ஆயிரம் இருக்குது சுபதினம்
அடுத்தவர் நலத்தை நினைப்பவர் தமக்கு — ஆயுள் முழுவதும் சுபதினம்

வாழ்த்துவோர்:

**சுதர்ஸனம்**
ஐடியல் பேக்கவுஸ்,
நெல்லியடி.

உரிமை:
இயற்கைநேசன் குறள்வழி வள்ளல்
மா. கனகராசா

[சி/6810]

## 1,000 மெ. தொன் உரம் 'மாஹேரா' கப்பலில் வந்தது

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கென ஆயிரம் மெற்றிக் தொன் உரவகைகள் கொழும்பிலிருந்து கமநலசேவை திணைக்களத்தினால் 'மாஹேரா' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

ஐந்நூறு மெற்றிக் தொன் யூரியா உரம், 20 மெற்றிக் தொன் ரி. டி. எம் உரம், 50 மெற்றிக்தொன் ரி.எஸ்.பி உரம், 100 மெற்றிக் தொன் ஓ.பி உரம் 100 மெற்றிக்தொன் தென்னை உரம் ஆகிய உரவகைகளே எடுத்து வரப்பட்டதாகக் கமநல சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ஐ–180]

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு பிற்போடல்

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தினால் 1999 — 08 — 25 ஆம் திகதி புதன்கிழமை நடத்தப்படவிருந்த மேற்படி சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சீட்டிழுப்புப் பற்றி பின்னர் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும்.

செயலாளர், பொருளாளர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

(68433)

## கேள்வி அறிவித்தல் திருத்தம்

### பருத்தித்துறை பிரதேச சபை

23 - 08 – 1999 உதயனின் 4 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தின் இரண்டாவது பந்தியில் 1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி என பிரசுரிக்கப்பட்டது தவறாகும். அதை 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி எனத் திருத்தி வாசிக்கவும்.

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
ஜே. பி. யு. எம்.
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

24 – 08 - 1999. (சி/8613)

காரைநகர்

## நீலிப்பந்தனை அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம்

### 25 - 08 - 99 புதன்கிழமை

காலை 6.30 இல் இருந்து 7,33 வரையுள்ள சிங்க லக்கினமும் திருவோண நட்சத்திரமும் கூடிய சுப முகூர்த்தத்தில் ஸ்ரீதுர்க்காதேவிக்கும் ஏனைய பரிவாரங்கட்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதமகுரு:
கிரியாகலாபமுக்தாமணி
சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக் குருக்கள்
(நயினை, சுதுமலை அம்பாள் தேவஸ்தானம்)

ஆசியுரை:
பிரதம குரு

அருளுரை:
நல்லைக் குருமணி
ஞானசம்பந்த சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

வாழ்த்துரை:
அருட்கவி சீ. விநாசித்தம்பி

பாராட்டுரை:
S. A. E. ஏகநாதன்
யாழ். மாவட்ட நீதிபதி

சிறப்புரை:
பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை
(காரை. ஆ. தி. ம. ம. வித்தியாலயம்)

மங்கள இசை:
சந்திரன், செந்தூரன்
N. K. கணேசன்
V. K. கானமூர்த்தி
N. R. கோவிந்தசாமி புதல்வர்கள்

நாதஸ்வர வித்துவான் N. K. கணேசன் அவர்களுக்கு ''கான பொழி வேந்தன்'' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

—திருப்பணிச் சபை.

மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற
வாழ்த்துவோர்:

**இளவரசி சேலைச்சோலை**
நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
தொலை பேசி இல: 2503

(68436)

உ

## முதலாம் ஆண்டு நிறைவு வாழ்த்துக்கள்

பருத்தித்துறையில் தமக்கென ஓர் இடம் வகுத்து
வர்த்தகத்துறையில் வெற்றி நடைபோடும்

### ஜெயகணேசா ஸ்தாபனத்தாரின்

முதலாம் ஆண்டு நிறைவு நாளில் (24 – 08 – 1999)
வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது தனித்துவம் பெற்ற அல்பா மிக்சரின் தயாரிப்புகளான

- அல்பா மிக்சர்
- பகோடா
- பொரிகச்சான்
- பொரிகடலை
- பொரி பருப்பு
- இனிப்பு முறுக்கு

என்பவற்றை சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள
எமது வடமராட்சிப் பகுதி ஏக விநியோகஸ்தர்கள்

### ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் பருத்தித்துறை

வாழ்த்துவோர்:

**அல்பா மிக்சர்**
பரமேஸ்வராச் சந்தி,
பலாலி றோட், யாழ்ப்பாணம்.

(68423)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தட்சனார் மருதமடு அகதி முகாம் மூடப்பட்டு அகதிகள் வவுனியாவுக்கு

மன்னார், ஓக. 24

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் மேற்பார்வையில் உள்ள தட்சனார் மருதமடு அகதிமுகாம் விரைவில் மூடப்படவிருக்கின்றது.

இந்த முகாமில் தங்கியுள்ள சுமார் ஐயாயிரம் பேரை அங்கிருந்து அழைத்துச் சென்று வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக அங்கு தற்காலிக குடிமனைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தட்சனார் மருதமடுவில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம் நீண்ட காலமாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் நடத்தப்பட்டு வந்தது.

அண்மையில் அந்த முகாம் உள்ளடக்கிய பகுதியைப் படையினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து முகாம் பகுதிக்குப் பாதுகாப்பு வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை அடுத்தே இந்த முகாமில் உள்ள அகதிகள் வவுனியாவுக்கு மாற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-164)

## 'யுனிசெவ்' நிதி உதவியுடன் 3 கிராம அலுவலர் பிரிவுகளில் கிணறு, மலசலகூடம் அமைப்பு

வலி. கிழக்கு, ஓக. 24

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் மீள் குடியேற்றப் பகுதியான இடைக்காடு, வளலாய், தம்பாலை – கதிரிப்பாய் ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கு புதிய மலசலகூடம் அமைக்கவும் கிணறுகள் புனரமைப்புச் செய்யவும் நிதி வழங்க 'யுனிசெவ்' நிறுவனம் முன்வந்துள்ளது.

கிணறுகள் திருத்தத்திற்காக 50 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் —

புதியமலசலகூடம் அமைக்கவென 25 பேருக்கு தலா 12 ஆயிரம் ரூபா வீதமும் —

வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான ஆரம்பக் கொடுப்பனவுகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். [ஐ-180]

## கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் ஹமீத் சந்திப்பு

கொழும்பு, ஓக. 24

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழி வகைகளை ஆராய்வதற்காக ஐ.தே.க. சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஏ. சி. எஸ். ஹமீத் தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்களுடன் தனித்தனியாகப் பேசவிருக்கின்றார்.

அண்மையில் அரச பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்தும் அவர்களுக்கு ஹமீத் விளக்குவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)


## அன்பான வேண்டுகோள்

முருகன் அடியார்களுக்கு அறியத்தருவது யாதெனில் மடத்தில் உற்சவ காலத்தில் வருடா வருடம் அன்னதானம் செய்கிறவர்களை மடத்து நிர்வாகத்துடன் கலந்து அன்னதானத் திகதியை நிர்ணயிக்கும்படி தயவாக வேண்டுகின்றோம்.

— நிர்வாகி

அறுபத்து மூன்று நாயன்மார்
குருபூசை மடம், நல்லூர்.

[68419]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1928 – 08 – 19 | 1998 – 09 – 04 |

அமரர் **கதிரித்தம்பி வாரித்தம்பி**

[அரசாங்க ஒப்பந்தகாரர், பளை.]

திதி: 1999 – 08 – 24

ஆண்டொன்று சென்றதையா உங்கள் அழகு முகம் பார்த்து
ஆறுதல் சொல்ல ஆயிரம் பேர் இருந்தாலும் தங்கள்
ஆசை முகம் காணாது அழுது துடிக்கின்றோம்.
ஆவது இனி என்ன அவன் வழியே ஆகட்டும்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

அல்லிப்பளை,
பளை.

(68[illegible])

## உபகர்மம் அனுஷ்டிப்பு

வலிகாமம் தெற்கு, ஓக. 24

ஆவணி அவிட்டம் என்றும் பூணூல் மாற்றுதல் என்றும் வருடம் தோறும் அந்தணர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் 'உபாகர்மம்' நாளை மறுதினம் வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட உள்ளது,

இருக்கு வேதிகளின் உபாகர்மம் நாளை புதன்கிழமை கொழும்புத்துறை விதானையார் வீதியில் உள்ள வி. கணேச சர்மாவின் இல்லத்தில் நடைபெறும்.

நியந்த்ரி அமைப்பின் ஆதரவில் யசூர் வேதிகளின் உபாகர்மம் பின்வரும் இடங்களில் அனுஷ்டிக்கப்படும்:

நல்லூர் சிவன்கோயில், மாதகல் அரசடிப் பிள்ளையார் கோயில், கதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம், கந்தரோடை வட்டக்கை அம்மன் கோயில், மயிலணிகந்தசுவாமிகோயில், நீர்வேலி கந்தசுவாமி கோயில், மட்டுவில் வடக்கு நெல்லியடி விநாயகர் கோயில், வடமராட்சி மாலிச்சந்திப் பிள்ளையார் கோயில்.

உபாகர்மக் கிரியைகளை நடத்திவைப்பதற்கான குருமார்களை யாழ்ப்பாணம் நியந்த்ரி அமைப்பு செய்துள்ளது. அத்துடன் இந்த நிலையங்களில் நடைபெறும் உபாகர்மக் கிரியைகளில் கலந்து கொள்ளும் அந்தணர்களுக்கு வேண்டிய பூணூல்களையும் நியந்த்ரி அமைப்பு இலவசமாக வழங்க உள்ளது. (ஐ-152)

## வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 24

இந்துசமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் 'கோபுரம்' இதழ் பல்வேறு பயன்மிகு அம்சங்களைத் தாங்கி வெளிவருகிறது.

ஒவ்வொரு காலாண்டிலும் வெளியிடப்படும் இவ் இதழானது ஆன்மீக தகவல்கள், கட்டுரைகள், கலாசார திணைக்களச்செய்திகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இந்த இதழைப் பெற விரும்புவோர் சுயமுகவரி எழுதப்பட்டு 3 ரூபா 50 சதம் பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடித உறையை 'பணிப்பாளர்' இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், இல. 98, வார்ட்பிளேஸ் கொழும்பு- 07 என்ற முகவரிக்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## போயா ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 9 மணி முதல் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும். பண்ணிசை, பஜனை, இலட்ச அர்ச்சனை, காயத்திரி மந்திர ஜெபம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

நண்பகல் நாராயண சேவையும் இடம் பெறும். (ஐ)

## கொல்களக் கூரையின் 'சீற்று'கள் அபகரிப்பு

சங்கானை ஓடக்கரைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சுடலை மடம், மாட்டுக் கொல்களம் ஆகியவற்றின் கூரையில் பொருத்தப்பட்ட அஸ்பெஸ்டஸ் சீற்றுக்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

வலி. மேற்குப் பிரதேச சபை வழங்கிய நிதி உதவியுடன் — சுமார் 60 ஆயிரம் ரூபா செலவில் — இவற்றுக்கு புதிய சீற்றுக்கள் பொருத்தப்பட்டிருந்தன என்றும் —

அவற்றில் பொருத்தப்பட்டிருந்த 40 சீற்றுகளையும் இனந்தெரியாதவர்கள் கழற்றி எடுத்துச் சென்றுள்ளதாகவும் —

மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மானிப்பாய் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-3)

# செய்திக் கொத்து

### புனரமைப்புக் கூட்டம்

தென்மராட்சி, ஓக. 24

புலோப்பளை சென். பிற்றேர்ஸ் சனசமூக நிலைய புனரமைப்புக் கூட்டம் அண்மையில் பளைப் பிரதேச சனசமூக அலுவலர் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப் பட்டது. [ஐ-117]

### தண்ணீர்ப் பந்தல்

நவாலி, ஓக. 24

நவாலிஅந்திரான்முருகன் மூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவ தேர், தீர்த்த பூங்காவன உற்சவங்களின் போது வழமைபோல் இம்முறையும் நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தினர் பக்தர்களுக்கு தண்ணீர்ப் பந்தல் சேவையை நடத்த முன்வந்துள்ளனர்.

### மாணவர்களுக்கு வசதிகள்

கொக்குவில், ஓக. 24

கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வி வசதிக்காக சிமெந்தினாலான தட்டுகள்; இருக்கை அமைப்புக்கள் ஆகியன அமைக்கப்பட உள்ளன.

இந்த வேலைகளுக்காக கல்வித் திணைக்களம் 85ஆயிரம் ரூபா பணத்தை வழங்கியுள்ளது. (ஐ-69)

### திருத்தப்படவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 24

வல்வெட்டி மத்தி பெருந்தெருவான உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை பிரதான வீதியையும், சமரபாகு பிரிவையும் இணைக்கும் வீதி நீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 20 வருடங்களாக மக்கள் பாவனையில் உள்ள இவ் வீதியைப் புனரமைப்பது பற்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையுடனும், சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளுடனும் தொடர்பு கொண்டும் எதுவித பயனும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டது, (ஐ- 15)

### வீதியில் புழுதி

கொக்குவில், ஓக. 24

ஊரெழுவிலிருந்து நீர்வேலி காரந்தன் சந்தியை நோக்கிச் செல்லும் வீதியின் ஒரு பகுதி சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

கிறசர் மக்கியினால் அமைக்கப்பட்ட இவ் வீதியில் காற்று வீசும் போது பெருமளவு புழுதியை வாரி இறைக்கிறது. (ஐ-69)

### வதிரி—உடுப்பிட்டி வீதி சேதம்

பருத்தித்துறை, ஓக. 24

வதிரி — உடுப்பிட்டி பிரதான வீதி பலத்த சேதமடைந்துள்ளது.

நீண்ட காலமாக இவ் வீதி திருத்தப்படாமையினால் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் உட்பட இவ் வீதியால் சேவையில் ஈடுபடும் இ.போ.ச மினி பஸ் வண்டிகளை செலுத்துவதிலும் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (ஐ-118-173)

### காணி அன்பளிப்பு

வலி. கிழக்கு, ஓக. 24

வலிகாமம் கிழக்கு வடபகுதி அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளலாய் கிழக்கு சங்கக் கிளைக்(கிளை 5) கட்டடம் புதிதாக அமைப்பதற்கென இச் சங்கத்திற்கு சங்கத்தின் தலைவர் ந. பேரின்பநாயகம் அப் பகுதியில் தனது சொந்தப்பணத்தில் காணி ஒன்றை வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார். (ஐ-180)

### சுடலை மடம் புனரமைப்பு

வலி.தென்மேற்கு, ஓக. 24

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட காக்கைதீவு சுடலை மடம் மற்றும் பாதை என்பனவற்றை திருத்துவதற்கான நடவடிக்கையை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எடுத்துள்ளார்.

ஒரு லட்சத்து 30ஆயிரம் ரூபா செலவில் திருத்த வேலைகள் நடைபெறவுள்ளன.

திருத்த வேலைகள் மானிப்பாய் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ-185)

### கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு

வலி. தென்மேற்கு ஓக.24

நவாலி வடக்கில் பொன்னாங்காணிச் செய்கையை அழித்த கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.


இரவுவேளைகளில் உரிமையாளர்களால் அவிழ்த்துவிடப்பட்ட கட்டாக் காலி மாடுகளே நேற்று முன்தினம் விவசாயிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டன. (ஐ-185)

### கசிப்பு விற்பனை

சண்டிலிப்பாய் ஓக. 24

ஆனைக்கோட்டைப் பகுதியில் சில இடங்களில் மீண்டும் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135(

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதே

(24-08-19


தேரேறும் தேவியவள் திருப்பாதம் போற்றுவோம்

**ஓம் சக்தி நகைத் தொழிலகம்**

(தங்கப் பவுண் வியாபாரத்தில் நாணயம் மிக்கவர்கள்)

**93, டாக்டர் சுப்பிரமணியம் சாலை, சுன்னாகம்.**

துர்க்கா சரணம் தாயே சரணம்

**தெல்லிப்பழை**

**பல. நோ. கூ. சங்கம்**

**துர்க்காபுரம், தெல்லிப்பழை.**

துர்க்கையைத் துதிப்போர்க்கு துன்பமேயில்லை

**ராஜா மெடிக்கல்ஸ்**

(மருந்துச் சரக்கு வியாபாரத்தில்
முதன்மையானவர்கள்)

**பிரதான வீதி, சுன்னாகம்.**

வம்மின்; வடம் பிடிமின்; வாழ்த்துமின்!

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

(மாணவர் மனங்கவர்ந்த புத்தக நிறுவனம்)

**கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி : 2573 (யாழ்ப்பாணம்).**

"தேவியைப் போற்றுவோம் தேறுதலடைவோம்"

**சண்யோ கோப்பி & கூல் பார்**

**(குளிர்பானப் பிரியர்களின் சொர்க்கம்)**

தரமான சிற்றுண்டிகள், குளிர்பானங்களுக்கு எம்மை நாடுங்கள்.

**இல. 16, பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.**

அன்னையில் எழிலில் அகிலம் மகிழ்கிறது

**ஜயதனா ரெலிகொம்**

(உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசி தொடர்பாளர்கள்)

உள்நாடு: 070 - 212262, 212423

வெளிநாடு: 0094 - 70 - 212262, 212423

**16, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.**

"அருள் பொழியும் அம்பாள் தேரில் பவனி சிறப்புற வேண்டுகிறோம்'

அம்பாளின் அடியார்க்கு அதிசிறந்த ஐஸ்கிறீம் வழங்குவோர்

**குணம் கிறீம் ஹவுஸ்**

**மெயின் வீதி, பருத்தித்துறை.**

**49, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.**

ஜனனியே சரணம், தாயே சரணம்!

**மக்மிலன் புத்தகசாலை**

**(யாழ். நகரில் புகழ்பெற்ற புத்தக வியாபாரிகள்)**

**இல, 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

சக்தியைப் போற்றுவோம் சகல பிணியுமகலும்

**பொஸ்கோ BOSECO**

**(பாடசாலை உபகரண விற்பனை முன்னோடிகள்)**

**இல. 3, நவீன சந்தை - யாழ்ப்பாணம்.**

தேரேறும் தேவியே போற்றி! போற்றி!!

**சாயி ஸ்ரேஷனேர்ஸ்**

(புத்தக வியாபாரத்தில் நிபுணத்துவமானோர்,
புதினத்தாள்களின் விற்பனை முகவர்கள்)

**92, கொட்டாஞ்சேனை வீதி - கொழும்பு - 13**

பிள்ளையார் கோவில் முன்பாக

தொலைபேசி - 452736

தேவியை நம்புங்கள்; தேவைகள் பூர்த்தியாகும்.

**வாணி புத்தகசாலை**

(புத்தகவிற்பனையில் தனித்துவம்மிக்கோர்,
செய்தித்தாள்களின் விற்பனை முகவர்கள்)

**குருமண்காடு சந்தி, - வவுனியா.**


## தேடியவர்களைத் தேடி தேரில் வருகிறாள் தேவி

தமிழர் எங்கு வாழ்ந்தாலும் - அங்கு செந்தமிழ் வளர்ச்சியிலும் சிவநெறி ஈடுபாட்டிலும் சிறந்து விளங்கி வருபவர்கள் என்பது நாடறிந்த உண்மையாகும். முன்னொரு காலத்தில் ஆலயங்கள் தனியொரு மத வழிபாட்டு நிலையமாகவே இயங்கின. இலங்கையில், குறிப்பாக யாழ். குடாநாட்டில், ஆலயம் ஒன்று அதனைச் சூழவுள்ள மக்களின் கலை, கலாசார வளர்ச்சியிலும் அவர்களின் சமூக, பொருளாதார உயர்ச்சியிலும், விஞ்ஞான, தொழில்நுட்ப, கல்வி சூழல் மேம்பாட்டிலும் பெரும் பங்காற்ற முடியும் என நிரூபித்தமையினால் தெல்லியூர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மிக உயர்ந்து விளங்குகிறது.

இந்துமத பாரம்பரியத்தில் துர்க்கை நல்லவை அல்லாதவற்றை எவ்வித தயவுதாட்சண்யமும் இன்றி அழிப்பவளாகப் போற்றப்படுபவள். சைவ மரபில் அழித்தல் தொழிலை இயற்றலிலும் சிவனுக்கு அவள் சக்தியாவாள். இதன் காரணமாக துர்க்கையைச் சித்திரிப்போர் அவளை பயமூட்டுபவளாகவும், நிஷ்டூரமான ஆளுமையுடையவளாகவும் எடுத்தியம்புவதுண்டு.

இன்று எல்லோருக்கும் நற்பணி புரிகின்ற அம்பாள் தேரேறி வரும் அற்புத நாள். ஈழத்திருநாட்டிலே முகபத்திர வேலைப்பாடுகளுடன் எண்கோண வடிவிலமைந்த திராவிட மரபுத் தேராக முதன்முதல் அமையப்பெற்றது தெல்லியூர் ஸ்ரீ துர்க்கையின் தேர் என்பது சிறப்பான அம்சமாகும். புது மோடியான இத்தேர் வேற்றுமையான சிறப்புகள் விதி விலகாது ஆக்கத்தின் சிறப்பெய்தும் உபபீடம் தொடக்கம், அதிஸ்டாவும் ஆனைத்தொட்டிப்பார், கொடிஞ்சி, பிரஸ்தானம், விமானம் ஈறாகக் கவசம் வரை முகபத்திர மடக்கைகள் மீட்கப் பெற்றுள்ளமையினால் சிறந்த லயச்சிறப்பு அமைந்துள்ளது.

அரோகரா கோஷம் வானைப்பிளக்க பக்கதர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அசையும் போது தேரில் உள்ள நூற்றியெட்டு மணிகளும் சேர்ந்து ஒலிக்கும் போது மணியோசை பக்தர்களின் பஜனையுடன் சேர்ந்து பொலிவு பெறும். பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட முந்நூறு அடி நீளமான தேர் வடத்தின் ஒரு பக்கத்தில் பெண்களும், மறுபக்கத்தேர் வடத்தினை ஆண்களுமாக இழுக்கும் பக்திபூர்வமான ஆரவாரம் வேறேந்த கோவில் தேர்விழாக்களிலும் காணமுடியாத சிறப்பம்சமாகும்.

நாளை ஆவணித் திருவோணத்தில் "துர்க்கா புஷ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் அம்பாள் தீர்த்தமாடும் அற்புதக் காட்சியைக் காண எம் கண்களிரண்டும் போதாது. சைவ மக்கள் விரதமிருந்து தேவியை வழிபட்டு, சங்கற்பம் செய்து, தீர்த்தமாடும் போது அவர்தம் பாவங்கள் எல்லாம் ஒழிந்து, புண்ணிய ஆன்மாவாக இடம் பெறுகின்ற நடு நிலையை அடைவதான நம்பிக்கை வளர்ந்து வருவதை இத்தீர்த்த உற்சவ காலத்தின் போது காணக் கூடியதாக உள்ளது. இப்பெருவிழா முடிவாக,

அன்று மாலை கொடியிறக்கம் இடம்பெறும். கொடியிறக்கம் இறைவனின் அருளல் தொழிலைக் குறிக்கிறது. கொடியிறக்கத்தின் பின் மௌன உற்சவம் நடைபெறும். இது உயிர் சிவத்துள் ஒடுங்கி பேரின்பம் அடைதலைக் குறிக்கும். கொடியேற்றம் பெருவிழா தொடங்குதலையும் கொடியிறக்கம் பெருவிழா நிறைவுறுவதையும் குறிக்கும்.

தேவியைத் தேடியோரைத் தேடி இன்று தேரிலே பவனி வரும் துர்க்காதேவி துட்டரை வெற்றி கொள்ள மனித உரு எடுத்து பக்தர்களின் துயர் துடைப்பாள் என இன்றைய திருநாளில் நம்புவோமாக.

- **சபா. புஷ்பநாதன்** -

(சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்)

## இரதோற்சவ விழா மகிமை

மிக அருமையாகப் பெற்ற மானிடப் பிறவியினால் வரும் பயன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களிலும் நின்று இறைவனை வழிபட்டு பரம புருஷார்த்தமாகிய நித்தியானந்த முத்தியை அடைதலேயாகும்.

சைவ ஆலயங்களிலே நித்திய பூசை, மகோற்சவம், கும்பாபிஷேகம், பிராயச்சித்தங்கள் யாவும் சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டாக அருளிச் செய்த சிவாகமங்களின்படியே நடைபெறத்தக்கன. இவைகளைப் பற்றி எல்லாம் வேறெந்த நூல்களிலும் விதிக்கப்படவில்லை. ஆகமங்களின் வழியிலேயே மகோற்சவம் நடைபெறுகின்றது. இந்த மகோற்சவம் தொடங்கி இன்றைய நாள் இரதோற்சவம் என்று சொல்லப்படுகின்ற சங்கார உற்சவத்தைக் குறிக்கிறது. அதாவது பசுபதியாகிய சிவபெருமான் சூரிய சந்திரர்களை சில்லாகவும், மற்றைய சரம், அசரம் ஆகிய பொருள்களை ஒவ்வொரு உறுப்புகளாகவும், நான்கு வேதங்கள் குதிரையாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அம்பின் கூர்வாயாகவும் கொண்டு எழுந்தருளி பிரம்மமாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத் தசுரர்களை தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார். திரிபுர சங்காரத்திற்கு உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்து இரதோற்சவம் நடைபெறுகிறது.

'புரிமடு நாட்சான்ற நிலத்தோர் பெருமணித்தேர் சங்கத்தலைவரு ருட்டினார்'

- திருவானைக்கா புராணம்.

இவ்வாறாகக் கூறப்படுகின்ற இரதோற்சவம் என்று சொல்லப்படுகின்ற உற்சவம் துர்க்காதேவியின் பேரருளால் நடைபெறுகின்றது. இத்தினத்தில் வழிபாடு செய்ய வருகின்ற அடியார்களுக்கும், தேர்விழாவிலே கலந்து கொள்ள முடியாமல் இருக்கும் அடியார்களுக்கும் அம்பாளின் புகழைப் பரப்புகின்றார்கள் "துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்" ஸ்தாபனத்தினர். அவர்கள் அம்பாளின் புகழினை பக்தர்களிடையே பரப்பும் அருந்தொண்டை, ஒரு தசாப்தத்திற்கு மேலாக இவ்வாறான சிறப்பு மலரினை பிரசுரித்து உதவுகின்றார்கள்.

அவர்களுக்கும் அம்பாளுடைய பேரருள் கிடைப்பதாகுக. தொண்டு என்றென்றும் தொடர்வதாக என்று பிரார்த்திக்கின்றோம்.

சுபமஸ்து. "லோகா சுகினோ பவந்து"

சிவஸ்ரீ

**இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்,**


பிரதம சிவாச்சாரியார்,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

**மலர் ஆக்கம்:**

**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**

**சுன்னாகம்.**



## ஏற்றமிகு தே

சொர்க்கமே வந்ததுபோல் தோற்றம் அளி
கீர்த்திமிக்க தேர்விழா ஆரும்புகழ் அருள் மண
முயன்றார்: பாங்குடனே ஓங்கும் இந்த உத்தமமா
தீவிலுள்ள பேரெல்லாம் சேர்ந்து நலம் பெற
நிறைவுறவே.

அன்னை அருளால் அழகாய் நடைபெறுக!
யெல்லாம் ஒழிக! எங்கும் இறையுணர்வே ஏற்றம்
சூழ்க புகழ்!!!

- வாக

## அன்னையே ஆண்

ஊரோடி மீண்ட நாம் உடைமைய
உரிமையும் ஓடவிட்டோம்.
சீரோடு வாழ்ந்தின்று சிதறுண்டு நி
செய்வதொன்றும் அறிகி
ஆரோடு நோவதினி ஆருக்குரைப்
அன்னையே ஆ[illegible]டருள்
தேரோடி வீதிவருந் தெ[illegible]பிநகர்த்
சேர்ந்துன்னை வேண்டுகி

### தர்மம் உன் தே

மனிதன் தன் உடலை விட்டதும் பணம் அ
தங்கி விடுகிறது. அவனுடைய பசுக்கள்
விடுகின்றன. அவனுடைய அருமை மனை
உற்றார் உறவினரோ சுடுகாடுவரை வருகிறார்க
உடலோ அக்கினியோடு ஐக்கியமாகி விடுகி
வரப்போகும் தோழன் அவன் செய்த தர்மம்

அமரர் க

## துர்க்காபுரத்தி

திருமுறை ஓதுதல், புராணபடனம் செய்
சிந்தித்தல், ஏழிசை இன்பத்தை இயங்
துர்க்காபுரத்திற்குரிய பண்பாகும்.

வேதசிவாகம வித்தகர்கள் விதிமுறை வழு
செய்யும் சிறப்பினைக் காண்போர் இங்கு திருக்
நினைத்துக் களிப்பர்.

திருமுறை ஓதும் பயிலும் சிவனடியார்கள்
நாதசுரக் கலைஞர்கள் கூட்டும் இசையின்
கிம்புருநாதர்களின் கீதவின்பம் எவ்வாறிருக்கு

தொண்டுபுரிந்து துர்க்காதேவியின் திருத்
காக்கும் பண்பாளர் திருக்கூட்டத்தின் அயராத்
துர்க்கா சூழலிலே தெய்வீக மின் ஆற்றல்

இவற்றுள் மேலாக எண்ணுங்கடங்காப் ப
பிரவாகம் துர்க்கையின் அருள் நீரூற்றைப்


**தேரேறும் தேவியின் அருள் எமது வாடிக்கையாளர்களுக்கு கிடைப்பதாக**

**இன்று வடம் பிடிக்க வாருங்கள் வந்தால் மேல்வீட்டில் இடம் பிடித்தல் எளிது.**

**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**


**புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும் - புதினப்பத்திரிகைகளின் பிரதம முகவரும.**

**தரமான றபர் முத்திரைகள் ( Rubber Stamps) தயாரிப்பவர்களும்.**


**பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேவி தேர்த்திருவிழா சிறப்பிதழ்



1999)



## அன்னே உன்னையல்லால் இனி யாரை வேண்டுவன்யான்



எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் இனிதாக அமைய இன்னருள் புரிபவளே.

ஆவணி உத்திரத்தில் சித்திரத்தேரேறி அவனியை இரட்சித்தருள்வாயாக. நின் கடைக்கண்ணொளிக்காகக் காத்து நிற்கின்றோம். கருணையுள்ள தாயே, எம் மண்ணுக்கும், எமது மொழிக்கும், எம்மினத்துக்கும் மீட்சியைத் தந்து காத்தருள்வாய்.

அம்மா! நின் திருவடிகளே சரணம்!
கலாநிதி, துர்க்காதுரந்தரி
**செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி** (ஜே.பி.)
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

## சமுதாய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கும் கோயில்

இந்துக்கள் தங்களுடைய வேதப்பொருளை நன்றாகத் தெரிந்து கொண்டு கூடித் தொழுதார்களானால் கலியுகம் நீங்கிப் போகும். கோயில்களை முன்னோர்கள் ஏற்படுத்தியது முக்கியமாக கூட்டுறவு மனப்பான்மையைத் தோற்றுவிக்கவே.

கடவுள் எங்கும் இருக்கிறார். எல்லாம் கடவுள் தானே. ஊருக்கு நடுவில் ஒரு கோயிலைக் கட்டி அங்கேதான் எல்லோரும் வந்து கும்பிட வேண்டும் என்ற நியமம் எதற்காகவென்றால் ஜனங்களுக்குள் ஐக்கியம் ஏற்படுவதற்காக, கோயில் சிலைகளில் மட்டுமே தெய்வம் இருப்பதாகவும், கோயிலுக்கு வெளியே தெய்வம் இல்லை என்றும் நினைக்கக்கூடாது. கல்லில் மாத்திரம் தெய்வம் இருக்கிறது என்று நம்பி நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வம் இல்லை என்று கூறக்கூடாது.

வேத புராணங்களில் சொல்லப்படும் மூர்த்திகள் எல்லாம் ஒரே பரமாத்மாவின் விளக்கங்கள் என்பதை இந்துக்கள் மறக்கக்கூடாது. அண்டம், பகிரண்டம் எல்லாவற்றையும் உள்ளேயிருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே நம்மைச் சூழும் அனந்தகோடி ஜீவராசிகளாக நிற்கின்றன: தன்னிடத்தில் உலகத்தையும், உலகத்திடம் தன்னையும் எவன் காண்கின்றானோ, அவனே கண்ணுடையவன். என்பது முன்னோர் கொள்கை. இதுதான் வேதத்தின் இறுதிக் கருத்து.

உன்னுடைய ஆத்மாவும், உலகத்தின் ஆத்மாவும் ஒன்றுதான். அனைத்து உயிர்களும் ஒரே ஆத்மாதான். நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லாரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம். அதுவே வேதாந்தம்.

ஆலயத்தில் கூடித்தொழும் வழக்கம், சமுதாய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கும் சாதனம். மேலும் ஊர் ஒற்றுமை கோவிலால் நிறைவேறவும் வாய்ப்புள்ளது. குடும்பத்தில் தாய், மனைவி, சகோதரி, மகள் அனைவரும் நாம் வணங்கும் பெண் தெய்வங்கள். குடும்பத்தில் வழிபாடு நடத்தும் வழக்கத்தால் குடும்ப ஒற்றுமை பெருகும். எவன் ஈசுவரன் மீது சகல பாரத்தையும் போட்டுவிட்டு, நடக்கிறானோ அவனுக்குத் தெய்வத்தன்மை உண்டாகும்.

*மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.*

## எங்கள் துர்க்காதேவி ஓம் துர்க்கா!

தெல்லிநகர் ஆளவந்தாய் எங்கள் துர்க்காதேவி
தேசமெல்லாம் வாழவைப்பாய் எங்கள் துர்க்காதேவி
சொல்லிலே பொருளாவாய் எங்கள் துர்க்காதேவி
சொல்லடங்கா இன்பம் தந்தாய் எங்கள் துர்க்காதேவி

சந்நிதியில் வந்து நின்றாள் எங்கள் துர்க்காதேவி
சஞ்சலங்கள் ஓட்டிடுவாய் எங்கள் துர்க்காதேவி
எந்நிதியும் வசமாகும் எங்கள் துர்க்காதேவி
ஈகைக்கோர் தாய்மடியே எங்கள் துர்க்காதேவி

அறம் வளர்க்கும் நாயகியே எங்கள் துர்க்காதேவி
ஆறுதலுக் கொரு நிழலே எங்கள் துர்க்காதேவி
மறம் துடைக்கும் மணிக்கரமே எங்கள் துர்க்காதேவி
மாறாத திருநிறைவே! எங்கள் துர்க்காதேவி

உழுகுடையின் பெருநிதியே எங்கள் துர்க்காதேவி
உயிர்க்குலத்தின் உயிர் நிலையே எங்கள் துர்க்காதேவி
அழும் விழியைத் துடைப்பவளே எங்கள் துர்க்காதேவி
அன்னையாய் அணைப்பவளே எங்கள் துர்க்காதேவி

கண்ணில் மணி ஆனவளே எங்கள் துர்க்காதேவி
கருமைநிறப் பேரழகே எங்கள் துர்க்காதேவி
பண்ணில் இசை ஆனவளே எங்கள் துர்க்காதேவி
பதமலரில் சரண்புகுந்தோம் எங்கள் துர்க்காதேவி

நின்பதமே சரண்புகுந்தோம் எங்கள் துர்க்காதேவி
நிம்மதியே! பெருநிதியே! எங்கள் துர்க்காதேவி
பொன்னொளிரும் புன்னகையால் எங்கள் துர்க்காதேவி
போதநிலை படைப்பவளே எங்கள் துர்க்காதேவி

சங்கு சக்கரம் கொண்டாய் எங்கள் துர்க்காதேவி
தர்மத்தைக் காத்துநின்றாய் எங்கள் துர்க்காதேவி
எங்கும் நிறை பரம்பொருள் நீ எங்கள் துர்க்காதேவி
என்றென்றும் போற்றுகின்றோம் எங்கள் துர்க்காதேவி

*-சகோதரி நிவேதிகா.*

## ...தர் விழா

...ளிக்கின்ற தேரை வனைந்தார்கள்
...ணக்கச் செய்வதற்குப் பக்தர் பலர்
...மாம் தேர்விழா ஊரார் பயனடையத்
...பறவே யாவருமே உளம் இனிது

...க! மன்னுகின்றபக்தர் மனக்குறை
...றும் பெறுக! இன்பம் பொங்குகவே!!

*...ாகீச கலாநிதி கி. வா. ஜ*

## ...ண்டருள்வாய்

...மயும் உள்ளமும்
...ம்.
... நிற்கின்றோம்
...கிலோம்
...ப்பதோ
...ர்வாய்
...த் துர்க்கையே
...கின்றோம். *சிற்பி.*

### ...தாழன்

... அவருடைய இரும்புப் பெட்டியில்
... கொட்டகைகளிலேயே தங்கி
...னவியோ வீதிவரை வருகிறாள்.
...ர்கள். அவன் போஷித்து வளர்த்த
...கிறது. ஆனால் அவனுடனேயே
...ம் ஒன்றுதான்.

தொகுப்பு:
**...கலாநிதி க. கனகராசா** J.P

## ...ன் பண்பு

...தல், சித்தாந்த சாஸ்திரங்களைச்
...க வைத்தல் இவையெல்லாம்

...ழவாது சிவாசாரியக் கிரியைகளைச்
...க்கைலாய பரம்பரைச் செந்நெறியை

...தரும் பண்ணிசை பசுமையின்பமும்
...பமும் புராணங்களிற் புகழ்பெறும்
...தம் என்று ஒருவாறுணர்வர்.
...தலத்தின் தூய்மையைப் பேணிக்
... தொண்டினை உற்று நோக்குவோர்
... நிலவுகின்றதென்றறிந்தின்புறுவர்.
...க்கதர் குழாத்தின் அன்புப் பரவசப்
...போன்றிருப்பதே புதுமை.

**அமரர் நம. சிவப்பிரகாசம்.**


அன்னையின் கடைக்கண்கள் அகிலத்தைக் காக்கும்
**ஸ்ரீ முருகன் நகைமாடம்**
(நவீன நகைகளுக்கு நம்பிக்கையானவர்கள்)
**25, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.**

தேரேறி வருகிறாள் தேவி; தேடியோரை நாடி
**சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்**
**தொலை தொடர்பு சேவை**
**காங்கேசன்துறை சாலை, சுன்னாகம்.**
உள்நாடு தொலைபேசி - 070-212380
வெளிநாட்டு தொலைநகல் - 0090 - 70 212380

தேவியின் திருக்கண்கள் வல்லன; நல்லன வெல்லாம் தரும்.
**ஐ. பேரம்பலம் அன் சன்**
கோயில் அபிஷேகத் திரவியங்கள், மருந்துச் சரக்கு வகைகளுக்கும் - வைத்திய சேவைக்கும் சிறப்பானவர்கள்
வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன்
**10, கே.கே.எஸ். சாலை, சுன்னாகம்.**

'துர்க்கையைத் துதிப்போம் தூய்மையடைவோம்'
**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
(புத்தக வியாபாரத்தில் புதுமை செய்வோர்)
**235, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

தெல்லியூர் தேவியே தேரேறி எம்மைக்காரும்
**குறூஸ்**
**தொலைத் தொடர்பு நிலையம்**
(தொலைத் தொடர்பியல் நிபுணர்கள்)
**நவீன சந்தை, சுன்னாகம்.**
உள்நாடு தொடர்பு: 070 - 212256
வெளிநாடு தொடர்பு: 0094 - 70212256

வாழியவள் சித்திரத்தேர், வளர்க அவள் புகழ்
**நாகம்ஸ் சினிமா & நாகம்ஸ் பாட்டா**
அங்கீகாரம் பெற்ற பாட்டா விற்பனையாளர்கள்
**நவீன சந்தை, சுன்னாகம்.**

தேரேறும் தேவியே சரணம் தாயே!
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
(புத்தக வியாபாரத்தில் முதன்மையானோர்)
**இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

தேவி தேரேற தேசம் சந்தோசத்தில்
**மங்கை சில்க்**
(மங்கையர் மனங்கவர்ந்த ஜவுளி மாளிகை)
**இல. 8, நவீன சந்தை, சுன்னாகம்.** **இல.15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

தேவியேயெம் துயர்துடைக்க தேரேறி வாருமம்மா
**சிற்றி. பெயின்ற் ஹவுஸ்**
(வர்ணமிகு தீந்தைகளின் ஜால மாளிகை)
**14, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.**

'தேரேறும் தேவியவள் திருப்பாதம் போற்றுவோம்'
**தினக்கலண்டர், டயறிகள், பாலர் புத்தகவகைகளுக்கு**
**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**
**கிளை: 320, செட்டியார் தெரு, கொழும்பு.**
தொலைபேசி: 334004

தேம்பியழும் எம்மினத்தைத் தேற்றி வழிகாட்டும் தாயே
**புகழ் பல்பொருள் களஞ்சியம்**
(பலசரக்கு வியாபாரத்தில் புகழ் பெற்றவர்)
**இல. 3, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.**

**தேவியைப் போற்றுவோம் தேறுதலடைவோம்.**
* தமிழ் - ஆங்கில நூலக சேவை
* றோணியோ
* தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பு
* கடிதம் தயாரிப்பு
* தமிழ் - ஆங்கில தட்டச்சு சேவைகளுக்கு
**நீதினி**
**டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயகணேசா ஸ்தாபனத்தின் முதலாம் ஆண்டு நிறைவு நாள்

**24 - 08 - 1999**

எமது ஸ்தாபனத்தின்
முதலாம் ஆண்டு நிறைவு நாளில்

எமது அன்புக்குரிய வாடிக்கையாளப் பெருமக்களுக்கும், யாழ். சாவகச்சேரி மொத்த வர்த்தக நிறுவனங்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள், எமது நிறுவன பணியாளர்கள் அனைவருக்கும் எமது மனம் கனிந்த அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிர்ஷ்ட சிட்டைகளுக்கான குலுக்கல் இன்று பிற்பகல் 4. 30 மணிக்கு இடம் பெறும்.

நன்றி.

ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்
T. P. No: 3284

பருத்தித்துறை. (68379)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 12 — 06 — 1925

மறைவு 25 — 07 — 1999

## திருமதி சிவகாமிப்பிள்ளை ஆறுமுகம்

(மாணிக்கம்)

[ அம்பிளா காரைநகர் (ஸ்கந்தபுரம்) ]

ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன — உன்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமோ — தேறுதல்
சொல்ல தெய்வம் வந்தென்ன அன்புத்தாயே — உன்
திருமுகம் பார்த்தால் போதாதோ?
அல்லல் மிகு இவ்வுலகில்
இடம் பெயர்ந்து அல்லல்படும் வேளையில்
எமக்கு அன்புக்கரம் நீட்டி
எம்மை ஆதரித்த எம் அன்புத்தாய் உள்ளமே
நீர்காட்டிய பாச அன்பை
நாம் என்றும் மறவோம்!

உங்கள் ஆத்மா சாந்தி பெற பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மனை இறைஞ்சுகின்றோம்.

பாசமிகு
க. வி. குலரத்தினம் குடும்பத்தினர்
(பெறாமகன்)

லிங்கன் ஸ்ரோர்ஸ்,
168, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (68 370)

# விளையாட்டு உபகரணங்கள்

காரைநகர், ஓக.24

'யுனிசெவ்' உதவித் திட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று சனசமூகநிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

காரைநகர் தங்கோடை சனசமூக நிலையம், புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம், கரம்பொன் ஞான வைரவர் சனசமூக நிலையம் ஆகிய மூன்று சனசமூக நிலையங்களுக்கும் சீசோ, ஊஞ்சல் மற்றும் பல விளையாட்டு உபகரணங்கள்'யுனிசெவ்' நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

(ஐ-73)

# எழுதுநர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 24

சுகாதார சுதேச வைத்திய பிரிவு, சுகாதார சேவைகள் திணைக்கள ஊழியர்களிடமிருந்து எழுதுநர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

நிரந்தர, அமைய தொழிலாளிகள் யாவரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# கிருபை

அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே; ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோகிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.


ஆகையால் தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்.

யாக்கோபு: 4: 6 - 7

**N. இரகுநாதன்**

வேல்பதி,
வேலணை கிழக்கு,
வேலணை. (68347)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 — 04 — 1965

உதிர்வு 13 — 09 — 1989

## அமரர் பத்மநாதன் பத்மசேகரம் (சேகர்)

திதி: பிரதோசம்

அன்பின் மகனாய் அருமைப்பிள்ளையாய்
இன்பங்கள் பகிர்ந்து உடன் வாழ்ந்திருந்தாய்
கண் போல வளர்த்த பாச மகனே!
பிறர் உயிர் காக்க தன்னுயிர் நீத்து
இடைநடுவில் சென்ற மாயமென்ன?
சொந்தங்கள் கலங்குதையா!
ஆண்டுகள் பத்து சென்றாலும் மகனே!
உன் பாச முகம் மறந்திடுமோ!

ப. சந்திரலீலா (தாய்).

மாரி அம்மன் லேன்,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி. (68272)

# குருபரன் கல்வி நிறுவனம்

புத்தூர்

**ஆரம்பம்: (23-08-99)**

- A/L **2001** – க்கான பொது அறிவு
- எழுதுநர் சேவைக்கான வகுப்பு
  ஆசிரியர்: திரு. குமாரவேல்
- SPOKEN ENGLISH

பிரிவு IV உங்கள் ஆசிரியர்
காலை 9.00 மணி

(சி/8612) –நிர்வாகி

# தேரூரும் தெல்லியூரான்




ஒன்றாய் அரும்பிப் பலவாய்
விரிந்துஇவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற்
பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற
வாஇப் பொருள் அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம்
மானும்என் ஐயனுமே.

இவ்வுலகெங்குமாய் நிற்பவளை
இணையநெற்றில் காண்பதற்கு.

http://members,tripod.com/~supakes23/temples,htm

த. சுபகேசவன்
கணனி பொறியியல் மாணவன்
(2 ஆம் ஆண்டு)
மல்ரிமீடியா பல்கலைக்கழகம்,
கோலாலம்பூர், மலேசியா.

சு. துரைராசா
ஒடக்கரை வீதி,
சங்கானை. (68382)


NIPPON EL - 2u MODEL
5 W = 25 W
7 W = 35 W
9 W = 40 W
11 W = 60 W
13 W = 75 W
15 W = 80 W

NIPPON EL - 3u MODEL
15 W = 80 W
18 W = 85 W
20 W = 100 W
24 W = 120 W

NIPPON ESL MODEL
9 W = 40 W
11 W = 60 W
13 W = 60 W
18 W = 85 W

நிப்போன் தயாரிப்புகள்
உங்களுடைய பணத்தினை பெறுமதியாக்குங்கள்
குறைந்த விலைகளில், கூடிய வகைகளில்
நிப்போன்
மின் சக்தியை சேமிக்கும் பல்ப்புகள்
COMPACT SIZE
மின்சக்தியின் அடிப்படையில் பணத்தினை சேமியுங்கள் அத்துடன் விலையின் அடிப்படையில் அது சிறந்தது
12 மாதங்கள் உத்தரவாதமுடையது 12 மாதங்களுக்கிடையில் பல்ப்புகளை இலவசமாக பழுதுபார்க்கப்படும்
NIPPON ENERGY SAVING BULBS ARE NOW REPAIRABLE
24 Hours a day will cost you only =/86 cts, SAVE 80%
SPECIAL DISCOUNTS FOR PURCHASES OF 50 BULBS OR MORE
LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 320961, 335301, 437735, 324726
10, Trelawny Place, (Behind Milk Bar)
Bambalapitiya Junction, Colombo 4. Tel: 589992
AVAILABLE ISLANDWIDE
Insist on "NIPPON" Guarantee Card
"NIPPON" The Guaranteed Product
கலர் பல்ப்புகளும் உண்டு
NIPPON ENERGY SAVER NIPPON ENERGY SAVER NIPPON ENERGY SAVER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மயங்கி விழும் மாணவர்கள்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் வகுப்புகள் நடைபெறும் வேளைகளில் மயங்கி விழுகிறார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. முல்லைத்தீவுக் கல்வி வலயப் பணிப்பாளர் இது குறித்து அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

மாணவர்கள் காலையில் சாப்பிடுவதில்லை. அதனாலேயே அவர்கள் இடைநடுவில் மயங்கி விழுகிறார்கள். சில மாணவர்கள் பசி தாங்க முடியாததால் பாடசாலை முடிவதற்கு முன்னரே வீடுகளுக்குச் சென்று விடுகிறார்கள்.

இந்தப் பரிதாபமான, பாதகமான நிலை எதிர்காலத் தமிழ்ப் பிரஜைகளான மாணவர்களின் ஆரோக்கியத்தையும் கல்வியையும் மிக மோசமாகத் தாக்கப் போகின்றது. போரின் பல கொடுமைகளில் இதுவும் ஒன்றாகிறது.

போர் கால வரையறை எதுவுமின்றி நீடித்துச் செல்கிறது. அதனை நிறுத்துவது குறித்துச் சிந்தனையே இல்லாததால் அழிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில் ஈடுபடுவர்கள் மட்டுமன்றி போர்ப் பிரதேசங்களில் வாழும் மக்களும் மிகப் பெரிய அளவில் பாதிப்புறுகின்றனர்.

போர்ப் பிரதேசங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையினால் அங்கு வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகள், அன்றாடத் தேவைகள் பூர்த்தியாவதில்லை. உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் தேவைக்குக் குறைவாகவே அனுப்படுகின்றன அதன் விளைவாகப் பட்டினியும் நோய்களும் மிகுந்துள்ளன.

மேலும்போரின்பிரதாவிளைவுகளில் ஒன்றான இடம் பெயர்வினால் மக்களின் தொழில் வாய்ப்புகள் அருகிவிட்டன. அதனால் அவர்கள் தமது நாளாந்த ஜீவனோபாயத்தைக் கொண்டு செலுத்த முடியாத மிகமிகக் கஷ்ட நிலைக்குத் தள்ளபபட்டுள்ளார்கள். போர்ப் பிரதேசங்களில் வாழும் மக்களின் பொருள்களை வாங்கும் சக்தி அடிமட்டத்துக்குத் தேய்ந்து போய்விட்டது.

மேற்கூறிய இரு காரணங்களாலும் பசியும் பட்டினியும் நோய்களும் வன்னிப் பிரதேசத்தில் சர்வசாதாரணமாகிவிட்டன. மாணவர்கள் பசியினால் பாடசாலைகளில் மயங்கி விழுவதற்கும், நோயினால் மக்கள் இறப்பதற்கும் இவையே மூல காரணிகள்.

மாணவர்களின் உடல் நலம் பாதிக்கப்பட்டால் அவர்களின் கல்வி நிலை மிகவும் தாழ்வுற்றுப் போகும் என்பது எவருக்கும் தெரிந்த விடயம். அவர்கள் நோயாளிகளாக மாறும் அபாயம் மட்டுமன்றி உயிர் போகும் பேரபாயமும் உண்டு

இதனை அரசாங்கம் உணர்வதாக இல்லை. வன்னி மக்களுக்குப் போதிய உணவு, மருந்து வகைகளையும் ஏனைய பொருள்களையும் அனுப்பிவைப்பதாகக் கணக்குக் காட்டுவதிலேயே கூடுதல் கவனம் செலுத்துகிறது! ஆகையால் மாணவர் பசி போக்கவும், அவர்களுக்கு ஊட்டமுள்ள உணவு அளிக்கவும் அது அக்கறை கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

தொண்டர் நிறுவனங்களே இதில் கவனம் செலுத்தி எதிர்காலத் தமிழ்ப் பிரஜைகளான வன்னி மாணவர்களைக் காப்பாற்றுவதற்கு ஏதாவது செய்ய வேண்டும். வெளிநாடுகளுக்கு நிலைமையை எடுத்துச் சொல்லி ஒரு சந்ததியைக் காப்பாற்றுவதற்கு உதவுமாறு கேட்டு, பெரிய அளவிலான மனிதாபிமான சேவையைச் செய்ய மனங்கொள்ள வேண்டும்.

# அடியவர்கள் சிந்தையில் உறைந்து அருளாட்சி புரியும் அன்னை துர்க்கை

தெல்லிப்பழையில் ஸ்ரீ துர்க்காதேவி எழுந்தருளி காட்சி கொடுக்கும் சிறப்பு இன்று உலகறிந்த அற்புதமாகும். மேலே தூக்கி முடித்த சடையும் இனிமை தவழும் புன்முறுவலும் கருணை ததும்பும் திருவிழிகளும் சங்கு, சக்கரம், சூலம், கபாலம், ஏந்திய கரங்களும் அடியார்கள் நெஞ்சத் திரைகளில் என்றும் நின்று நிலைக்கக்கூடியதான துர்க்கையின் காட்சி இங்கு காணக் கிடைக்கின்றது.

அன்னையின் பெருமையை எடுத்துச் சொல்ல எமது ஆற்றல் போதாது. எழுத்தில் வடிக்கவோ என்றால் அது சொற்களுள் அடங்காதது. ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்கும் நிறைந்து நிற்பவள் பராசக்தி. இப்பிரபஞ்சத்துக்கு அசைவும் அறிவும், ஆற்றலும் தந்து ஆட்டுவிப்பதும் அந்த சக்தியே. இறைவனையே அசையவைத்து பஞ்சகிருத்தியங்களும் நடைபெற மூல காரணமாய் நிற்பவள் இப்பரதேவதை.

உள்ளத்தின் உள்ளொளியாய் விளங்குகின்ற துர்க்கை வாக்கின் ஒளியாய் வடிவெடுத்து அனைத்தையும் அசைவிக்கின்றாள். மலரும் மணமும் தேனும் சுவையும் சொல்லும் பொருளும் என சிவசக்தி கலந்து இப்பிரபஞ்சத்தை இயக்குகின்றது.

''வந்திப்பவர் உன்னை
வானவர் தானவாரனவர்கள்
சிந்திப்பவர் நற்றிசைமுகர்
நாரணர் இந்தையுள்ளே
பந்திப்பவரழி யாப்ர
மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப்பவர்க் கெளிதாமெம்
பிராட்டி நின்றண்ணிளியே''

எனவே தேவியை வணங்குபவர் சிலர்; வணங்கிச் சிந்தையுள்ளே இருத்துபவர் மிகச் சிலர்; சிந்தையுள்ளே அன்பினால் கட்டி பந்திப்பவர் சிலரிலும்சிலர்; அவ்வாறுபந்தித்த அடியார்கள் அன்னையின் கருணையை உலகுக்குவெளிப் படுத்தி உள்ளார்கள்.

பரலோக இன்பத்தை இகலோகத்தில் காட்டி வைப்பது திருக்கோயில்களே. திருக்கோயில் கடமைகள் யாவும் பதி புண்ணியங்களாகும். இத்தகைய கடமைகளில் முன்நின்ற நமது முன்னோர்களையும் நாம் போற்றவேண்டும். துர்க்கையம்பாள் கோயிலை மையமாகக் கொண்ட தெல்லிப்பழையிலேயே இன்று தெய்வ மணம் கமழ்ந்து, திருவிழாக்கள் பொலிந்து, பக்தர் கூட்டம் பரந்து, இங்குள்ள மரங்கள் கூட, மறை ஒலியைப் பரப்பும் சிறப்போடு காட்சி தருகின்றன. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆலயத்தை மூடி இருந்த பற்றைகளும், புதர்களும் அகன்று இன்று அருமறை ஒலிக்கும் ஆலயமாக யாக குண்டங்களும் எழில்மிகு வீதிகளும் பக்தர்களின் இடையறா நடமாட்டங்களும் பொலிந்து காணப்படுகின்றது.

ஆலயம் கருவறை தொடக்கம் நுழை வாயில் வரை விரிவுற்று அணு தொடக்கம் அண்டம் வரை ஆதிபராசக்தி விரிவுற்று நிற்கும் தத்துவத்தைக் காட்டுகிறது. இவ்வாண்டு திருப்பணி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் இராஜகோபுரம்கலைமேவுதிருவாயிலாக அமைந்துள்ளமை குறித்து பலரும் வியந்து போற்றுகிறார்கள்

''அஞ்சள் மொழியாள்
அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி
சீருடைச் சேயிழை
தஞ்சம் என்றெண்ணித்
தன்சேவடிபோற்றுவார்க்கு
இன்சொல் அளிக்கும்
இறைவி என்றாரே''

தேவியின் திருவடியைச் சரணடைந்தால் அடைந்தவர்க்கு இன்சொல் அளித்து வரம் பல ஈந்து வாழ்வித்து அருள் பாலிப்பாள் என்பது திருமூலர் வாக்கு

[நன்றி:- 1980 ஆம் ஆண்டு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய இரதோற்சவ சிறப்பு மலர்]

துர்க்காதுரந்தரி
**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

கொழும்புத்துறை, ஒக. 24

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோயில் உற்சவத்தை ஒட்டி நல்லூர் ஆலய கிழக்கு வீதியில் உள்ள அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் யாழ். மாவட்ட இந்துப்பேரவையின் ஆதரவில் நடைபெற்றுவரும் தமிழ் மந்திரங்களாகிய கந்தரனுபூதி திருமந்திரம் தொடர் சொற்பொழிவுகளில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6.00 மணிக்கு 'குருவாய் வருவாய்' (கந்தரனுபூதி) என்ற தலைப்பில் பலாலி ஆசிரியர் கலாசாலை உபஅதிபர் விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் உரை நிகழ்த்துவார். (ஐ-30)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தை ஒட்டி இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 5-30 மணி முதல் 7-00 மணி வரை வாசஸ்பதி ரஜீந்திரனின் இசைக்கச்சேரி இடம்பெறும். இதற்கு அணி சேர் கலைஞர்களாக பாக்கிய லட்சுமி நடராசா (வயலின்), எஸ். மகேந்திரன் (மிருதங்கம்) ஆகியோர் கலந்து கொள்வர்.

(க-30-103)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 24

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய மகோற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் தெய்வீகக்கலை நிகழ்வில் இன்று காலை 10 மணிக்கு கலாபூஷணம் வி. செல்லத்துரையின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். [ஐ-க-30-173]

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக. 24

ஈவினை மத்தி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை இடம் பெறும்.

அதிகாலை 5.00 மணி தொடக்கம் மாலை வரை நடைபெறும் இந் நிகழ்வில் யாக பூஜைகள், ஹோமம், பிரதிஷ்டா நமஸ்காரம், கும்ப வீதி உலா போன்ற கிரியா நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

நல்லை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையும், சிவத்திரு வ. குமாரசாமி ஐயரின் அருள் உரையும்இடம் பெறவுள்ளன.

மண்டலாபிஷேகம் தொடர்ந்து இடம்பெற்று அடுத்த மாதம் 13 ஆம்திகதி திங்கட்கிழமை ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் இடம்பெற்று மண்டலப் பூர்த்தியும்,

தொடர்ந்து 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.00மணிக்கு கொடியேற்ற உற்சவமும் 24 ஆம் திகதி வெள்ளி காலை10.00மணிக்கு தேர் உற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஐ-ரி)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பகம்

### நிருதரை அழித்தவேலே!

அருளுரு வாகி நின்ற
அம்பலத்தானின் மைந்தா
சரவணப் பொய்கை தன்னில்
தவழ்ந்திடும் குழந்தை வேலா
பரவிடும் அடியார் துன்பம்
படுதுயர் தீர்க்கும் செல்வா
நிருதரை அழித்து நல்லூர்
நின்ற மெய்ஞ் ஞான வேலே!

- அருட்கவி சீ. விநாசித்தம்பி

### தொல்லை வினை களை தூயவா!

நல்லை நகர் வள்ளி நாயகா தெய்வானையார்
— மகிழ் பாலகா
தொல்லை வினை களை தூயவா தொண்டர்நாயகா
— வடிவேலவா
கல்லை நிகர்த்தவர் நெஞ்சிலே வேலை வையடா
— இடர் தீரடா
எல்லையில்லா புகழ்பெற்றவா ஈசன் நேசனே
— நல்லை வாசனே
வில்லை வளைத்தவர் காட்டிலே வேட்டையாடுவார்
— நாட்டையாளுவார்
சொல்லை நிலை பெறச்செய்குவாய் சோதிவானவா
ஞான தேசிகா!

— ப. க. மகாதேவா

### உதயவாக்கு

மகனே உனக்கு மன அமைதி வேண்டுமானால் உலகத்தவர்மீது குறை கூறாதே மற்றும் உன்னிடத்திலுள்ள குறைகளைக் களைப்பார்.

—அன்னை சாரதாதேவி



### சென்னியிலே கை குவித்தார்

காரார் குயில் பாடக் கார் வண்டு பண்பாட
ஆராத காதலடியரெலாஞ் — சீராகச்
சென்னியிலே கை குவித்தார் தேரடியிற் தேசிகனை
என்னையவன் பார்த்தான் இனிது.

— யோகர் சுவாமிகள்

## நாளை

ஆவணி 8
புதன்கிழமை
திதி: சதுர்த்தசி
வைகறை 5-55 வரை
நட்சத்திரம்: திருவோணம்
நள்ளிரவு 12.38 வரை
சுபநேரம்: 4 35—6.05
ராகுகாலம்: 12.05—1.35
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

### யாழ்ப்பாணம்

எஸ். திசோபா (112667சீ) ஆர். நாகமுத்து (112668ஏ) எல். தங்கராஜா (112669ஏ), பீ. டினேசன் (112682ஏ), பீ. பரமேஸ்வரி (112682பீ), கே. ஈழரசி(112683ஏ), கே. இந்திராணி (112683பீ) ஜீ. ஜெயசிங்கம்(112685ஏ), கே. ஜெயச்சந்திரன் (112685பீ), ஜே. ஜெயசந்திரன் (112685 பீ, எஸ். எம். ஜெரோ (112686ஏ).

ஏ. கந்தையா (112692ஏ), ரீ. சித்திகுணராசா (112696 பீ), எஸ். ஆர் ஏ. மார்க்கு (112697ஏ), ஆர். சத்தியமூர்த்தி (112698ஏ), பீ. டபிள்யூ. பியசேனா(112705 ஏ), என். பஞ்சலிங்கம் (112712ஏ), பீ. ராஜவத்ரதன் (112712பீ), பீ. கஜவதனி (112712சீ), பீ. சண்முகராசா[112719ஏ], வீ. கண்ணகை [112720ஏ].

ஆர். ராஜகுலேந்திரன் [112729ஏ), ஆர். சாகிசன் [112729பீ], எஸ்.எஸ். ரவீந்திரன் [112744ஏ], ஜே. எம். பீ.]ஜெயலக்சுமி[112747ஏ], மேரிவினோதாஸ் [112747 பீ], ரீ. மகாதேவன்(112750 ஏ), ஈ. எஸ். இளையதம்பி (112751ஏ), ஈ. சகுந்தலாதேவி [112751பீ], சீ.ரோமாவழதர் [112752ஏ], எஸ். விஜயரட்ணம் [112842ஏ].

எஸ். விஜயரட்ணம் [112842ஏ], டீ. ரீ. கீதா [[113748ஏ], எஸ்.யோகேஸ்வரி [113784ஏ], ரீ. சத்தியாதேவி [113784பீ], எஸ். யோகேந்திரன் [113784சீ], எஸ். சுகனியா [113784டீ], எஸ். றம்மியா ]113784ஈ], எஸ். பிரவியன் [113784 எவ்], வீ. வல்லிபுரம் [113786ஏ] எஸ். யோகரட்ணம் [113788ஏ].

வீ சத்தியானந்தன் [113789ஏ], ரீ ராசா [113791ஏ], ரீ. தனுசியா [113791பீ] வீ. தவேந்திரன் [113793ஏ], எஸ். நிமலராஜ் [113797ஏ], கே. சுப்ரமணியம்] [113797பீ], எஸ். நாகேஸ்வரி ]113797சீ] ஆர். ரீ. விக்னராஜா [113798ஏ], எஸ். அந்தோனிப்பிள்ளை [113799ஏ], ஆர். அந்தோனிப்பிள்ளை [113799 பீ].

எஸ். நாகபூசனி (113803 ஏ), எஸ். சபாசலிங்கம் (113803பீ), எஸ். ராஜபூபதி (113803சீ), ரீ. தனராசா (113806ஏ), வீ. வீரசிங்கம் (113807ஏ), வீ. புவனேஸ்வரி (113807பீ), ஏ. ஆர் பெலிசியா (113809ஏ), சீ. சுந்தரலிங்கம் (113814ஏ), எஸ். தயானந்தன் (113876 ஏ), எஸ். விஜயலக்சுமி (113816).

பீ. ஏ. அருமைநாயகம் (114028ஏ), கே. மகேந்திரன் (114052ஏ), ஜே. வசந்தி (114058ஏ), டாக்டர் வீ. நடராசா (114092ஏ), எஸ். சுந்தரலிங்கம் (114096ஏ) எஸ்.செல்வரட்ணம் (114099 ஏ), ஈ. ஆர். ஜெபநாயகம் (114115ஏ), பீ. ஏஞ்சல்டா (114120ஏ), கே. ஆனந்தராஜா (114137ஏ), எவ். ஆர். எஸ். என். குணசீலன் (114151ஏ), எவ்ஆர். என். கே. டண்ஸ்ரன் (114167ஏ),

எவ். ஆர். ஏ. மரிசிலின் (114167பீ), ஏ. ரவீந்திரா (114179ஏ), ஆர். எஸ். ஜோசப் (114194ஏ), என். மகேந்திரன் (114207ஏ), டாக்டர் பி. எஸ். என். பாண்டுசேன (114208), வீ. யோகராஜா (11455ஏ), கே. அன்னலிங்கம் (102403 ஏ), ஏ நொக்மா(084101ஏ), பீ. குகநேசன் (098794ஏ), எம். பீ சீ சரிஜினி (109338 பீ). எஸ். சங்கரநாராயண (109344ஏ).

எம். யோகேஸ்வரன் (109433 ஏ), வை. தனலக்சுமி (109433 பீ), வை. விஜிதா 109433 சீ), வை. கஜேந்திரன் (109433டீ), மயூரன் (109433 ஈ), வை. டிவிதா (109433 எவ்), ரீ.ஆசீர்வாதம் (109543 ஏ), ஏ. அன்ரனி (109544 ஏ), ஏ. நவரட்ணம் (109597 ஏ). என். றூபி (109597 பீ), கே. வேதனாசியம் (11233 ஏ),

ஆர். டீ. சிசிலியா (112393 ஏ), பிரேமிளா (112393பீ), பீ. ஜெயன்சன் (112393 சீ), எஸ். ரட்ணம்மா (112394 ஏ), ரீ. சஜேந்திரன் (112459 ஏ), ரீ. ரவீந்திரன் (112459 பீ), ஜ. யோகராணி(112528 ஏ), எஸ் ஜெபராஜா (112554 ஏ), ஆர். எல்வினஸ் (112569 பீ, சண்முகநாதன் (112570 ஏ),

ரீ எம்.ராசையா [112638 ஏ], என். நாராயணன் [112653 ஏ], என். ஜெயசாந்தினி [112653 பீ], என். திவாசுரன் [112653 சீ], எம். கனகன் [112663 ஏ], கே. சாந்தினி (112663 பீ], எம். எல். வெஞ்லொஸ் [112717 ஏ], டாக்டர். கே. மனோகர் [113794 ஏ], ஏ. யேசுதாகன் [113847 ஏ], ஜே. மேரிமெக்ரலின்[113847 பீ],

டீ அந்தோனிப்பிள்ளை [124504ஏ], எம். கணேசன் [107461 ஏ], எம். கே. ராசிதா [107461 பீ]. ரீ. தேவதாசன் [109206 ஏ], ரீ. தர்ஷன் [109206 பீ], ஆர். எஸ். ஜெயராமன் [109355 ஏ], ஆர். அருளம்பலம் [109385 ஏ], வீ. கந்தையா [112420 ஏ], எஸ். சண்முகதாசன் [112517 ஏ], எஸ் நந்தினி [112526 ஏ], வீ. சுரேஷ்குமார் [112526 பீ]

எஸ் தர்ஷன் (112526சீ), எஸ் சுபாராஜ்(112526டீ), ஈ எல் ஜே அமலராணி (112754ஏ), ஆர். செல்வநாயகம்(113795ஏ), டாக்டர் என். யோகநாயகம் (113860 ஏ), என். கந்தையா (102691 ஏ), கே. அருமைராஜா (109511ஏ), எஸ். ஹரிதாஸ் (109514ஏ), எஸ் ஜெபராசசிங்கம் (109515ஏ), பீ. ராசதுரை (112550ஏ), எம். எஸ் ரஞ்சித் (112687ஏ)

எஸ். பீ. பத்மாநந்தன் [113839ஏ], கே. குணாநந்தன் [113895ஏ], கே. சதாசிவமூர்த்தி [113899ஏ], ரீ. சுபாதரன் [113901ஏ], எவ். ஆர் ஏ மகேந்திரன் 113913 ஏ], பீ. அருளையா [099573ஏ], ஏ. சகுந்தலா [099861சீ], ஏ. அன்ரனிராஜன் [104430ஏ], எஸ். வசந்தரூபா [107593ஏ], ஜே. தணிகாசலம்பிள்ளை [110326ஏ], எஸ். எவ். அல்மெடா [110341ஏ[.

### கோப்பாய்

ரி. மனோறஞ்சிதமாலா (093885ஏ), எஸ். குணசிங்கம் (096887ஏ), யோகேஸ்வரி (096887பீ), குலேந்திரராசன் (096887சீ), எம். மனுகந்த் (097167ஏ), கே. எஸ். மதுவேலு (097167பீ), எம். மதுவேலு (097167சீ). எஸ். புஸ்பநாதன் (097684 ஏ), வி. தம்பிராஜன் [097868ஏ], எல். மார்க்கண்டு (097874ஏ).

வி. ரட்ணசபாபதிப்பிள்ளை [099572ஏ], கே. அரு [099861ஏ), ஏ. தயாகரன் [099861பீ], ஜி. சிவஞானம் [100055ஏ], ஆர். ரட்ணம் [101661ஏ]. என். நாகேஸ்வரன் [101665ஏ], ரி. கலாஜினி [101674ஏ], கே. தமு [101674பீ), ரி. பாக்கியம் [101674[, என். இராசேந்திரம் [101676ஏ).

ஏ அதராமணி(101679எ), ஏ அரவிந்தன் (101679பீ), எஸ் நடராஜதமார்(101746 ஏ), எஸ். சுகிர்தன் (104022 ஏ), எஸ். சந்திரதேவி(104022 பீ), ரி.செல்லியா(104024ஏ), ரி. சின்னத்துரை(104029ஏ), எல். பாபுராஜ் (104029பீ), எஸ். சிவலிங்கம் (104039ஏ), எஸ்.சதாநாதன்(104041ஏ),

என். கே. இராஜவடிவேல் (104050ஏ), ரி சேதுபதி (104051ஏ), எஸ். தம்பிமுத்து (104056ஏ), பி முருகேசம்பிள்ளை(104071ஏ), வி கே. கணபதிப்பிள்ளை(104071பீ), எம். வீரகத்திப்பிள்ளை (104073ஏ), எஸ் கிருஷ்ணபிள்ளை (104078ஏ), பி. ஸ்வேந்திரன் (104078பீ), என். தவமணி (104081ஏ), ஏ ஜெபசோதி (104098ஏ),

ஏ.அருள்கோபன் [104091 பி], வி. பொன்னம்மா [104094ஏ], எஸ்.எஸ்.அரியபுத்திரன் [104101ஏ] ,எஸ். தாயாகதி [104101பி[, வி அரியபுத்திரன் [104101சி], எம்.மகேந்திரம் [104102ஏ[, எஸ் இராசம்மா[104103ஏ], எஸ்.ஜெயக்குரமன் [104103 பி], எஸ்.நல்லையா [104105 ஏ], ரி.மகாதேவன் [107613 ஏ].

எஸ், தனகப்பிள்ளை ]107613பி[, எஸ்.நடராஜா [107631ஏ], ரி.கதிரன் [107650ஏ], ரி இராஜேஸ்வரன் [107721ஏ], ஆர். வேணுகா [109611ஏ], ஆர்.சத்பபாமா [109611பி], எஸ்.ராஜதுரை [109612ஏ], பி. நடராஜா [109617ஏ], பி. நடராஜா [109617பி], ரி.லோகேஸ்வரி [109625ஏ].

ரி. சஜித் [109625பீ], ரீ. நவரட்ணா [109630ஏ], யூ. தம்பித்துரை [109631ஏ], என். அருமை [109633ஏ[ என். சத்யதேவி [108633பீ[, வீ சந்திரசேகரம்[109639ஏ[, என் யோராணி [109671ஏ], என். சிவகுமார் [109671பீ], எஸ். தங்கம்மா [109673ஏ], எஸ். ராகினி [109673பீ].

(தொடரும்)

# கிருமிநாசினி பயன்படுத்தாது

## பரீட்சார்த்த மரக்கறிச் செய்கை

### கோண்டாவிலில் பெரும் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக 24

செயற்கைக் கிருமிநாசினிகளைப் பயன்படுத்தாமல் பரீட்சார்த்தமாக குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட மரக்கறிப் பயிர்ச்செய்கை பெரு வெற்றி அளித்துள்ளது.

இருபாலையில் உள்ள மக்கள் நலன் காக்கும் பிரிவின் ஆதரவுடன் விவசாயத் திணைக்களம் இந்த பரீட்சார்த்த முயற்சியை மேற்கொண்டது.

குடாநாட்டு மக்கள் பயன்படுத்தும் மரக்கறி வகைகளில் செயற்கைக் கிருமிநாசினிகளின் தாக்கத்தால் அதிகளவு நச்சுத்தன்மை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை நிவர்த்தி செய்து நச்சுத்தன்மையற்ற மரக்கறிகளை உற்பத்தி செய்து மக்களுக்கு விநியோகிக்கும் நோக்குடன் இந்தப் பரீட்சார்த்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கென கோண்டாவில் இருபாலை வீதியில் பழனி ஆண்டவர் ஆலயத்துக்கு முன்பாக பரீட்சார்த்தமாக தக்காளி, கறிமிளகாய், பயற்றை, வெண்டி, பாவல், மிளகாய் ஆகிய மரக்கறி வகைகள் செய்கை பண்ணப்பட்டுள்ளன

இந்தப் பயிர் வகைகள் எவற்றிற்கும் எந்த விதமான செயற்கை கிருமிநாசினிகளும் பயன்படுத்தப்படவில்லை.

இயற்கை கிருமிநாசினிகளான உள்ளிக் கரைசல், வேப்பிலைச்சாறு என்பன மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

இயற்கை உரங்களான வேப்பம் புண்ணாக்கு. மாட்டெரு என்பன அதிகளவிலும் செயற்கை உரங்கள் சில மிக மட்டுப்படுத்தப்பட்டளவிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சார்த்த முயற்சி பெரு வெற்றி அளித்திருப்பதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த முறைகளைப் பின்பற்றி குடாநாட்டு விவசாயிகளும் செயற்கை கிருமிநாசினிகளின் பாவனையைக் குறைத்து இயற்கைக் கிருமிநாசினிகளின் பாவனையை அதிகரிக்க வேண்டும் எனவும் —

அதன் மூலம் குடாநாட்டு மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற மரக்கறி வகைகளை வழங்குவதற்கு ஏதுவாக இந்த முறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் —

விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் கோரி உள்ளன.

(ஐ-6-9)

# 16 உழவு இயந்திரங்களை திணைக்களம் தருவித்தது!

வலி. கிழக்கு, ஒக 24

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கென 'சீடா' திட்டத்தின் கீழ் 16 இரு சில்லு உழவு இயந்திரங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

முற்பணம் கட்டிய விவசாயிகளுக்கு இவை வழங்கப்படவுள்ளதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

அண்மையில் விவசாயிகளுக்கு 15 இரு சில்லு உழவு இயந்திரங்கள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யாழ் விவசாயிகளுக்கான ஒரு தொகுதி விதை ... 'மாஹோ' கப்பலில் ... வரப்படவுள்ளன.

(ஐ-180)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஒக 24

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சங்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

உற்சவ காலங்களில் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் [க-3][

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக 24

சரசாலை நுணுவில் ஸ்ரீ சிதம்பரவிநாயகர் ஆலய வருடாந்த மணவாளக் கோலத்திருவிழா நாளை புதன்கிழமை காலை 8 00 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

நண்பகல் 12 00 மணிக்கு விசேட சமயச் சொற்பொழிவு நடைபெறும்.

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுர நாதர் ஆலய ஸ்ரீரங்கநாதர் நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும். (க-30)

★ ★ ★

குப்பிளான் கற்கரைக்கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றுவரும் வருடாந்த மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும்இடம்பெறும். [ஐ-3]

★ ★ ★

காரைநகர் நீலிப்பந்தனை ஸ்ரீ துர்க்காதேவிதேவஸ்தான மகா கும்பாபிஷேகம் நாளை25 ஆம் திகதி மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். (ஐ-க15)

★ ★ ★

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா இன்று செவ்வாய் காலை நடைபெறவுள்ளது.

நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது (இ-86)

## நேரடி ஒலிபரப்பு

அருள் மிகு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் இன்று காலை நடைபெறவுள்ள தேர் உற்சவம் மற்றும் நாளை காலை நடைபெறும் தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர் உற்சவம் நாளை மறுதினம் இடம்பெறும் தீர்த்தோற்சவம் ஆகிய நிகழ்ச்சிகள் இலங்கை வானொலியில் நேரடியாக ஒலிபரப்பப்படவுள்ளன.

இந்த அஞ்சல் காலை 7.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை வழக்கமான அலை வரிசைகளில் இடம்பெறவுள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்தெரிவித்துள்ளது. (ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சுற்றாடலில் வாகனங்கள் ஓடக் கட்டுப்பாடு

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் வாகனங்கள் செலுத்துவது தொடர்பான புதிய விதிமுறைகளை யாழ். மாநகர சபை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக சபை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நல்லைக் கந்தனின் வருடாந்த உற்சவ காலங்களில் எம்மால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வீதித்தடைமுகாம்கள் ஊடாக எமது அனுமதி பெற்ற சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்றவை மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்ட போதிலும் எம்பெருமான் வெளிவீதியுலா வரும் நேரங்களிலும் அதன் பின்னரும் ஆலயச் சூழலில் அநேக பக்தர்கள் முருகனைத் துதிக்கும் நோக்கத்தோடு கூடிநிற்கையில் ஆலயச் சூழலின் அமைதியைக் குலைக்கும் நோக்குடனும், விபத்துக்கள் ஏற்படக்கூடியவாறும் மேற்படி வாகனங்கள் மிகவேகமாக [ஓடிச்செல்வதாகவும் அவற்றுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதிகளை இரத்துச்செய்தும் வாகன சூனிய பிரதேசமாக நல்லூர் ஆலயச் சூழலைப்] பிரகடனப்படுத்துமாறும்பெருந்தொகையான பக்தர்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் எம்மிடம் கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

தடைமுகாம்களுக்கு உட்பட்ட கடைகளுக்கு உரிய பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் தினமும் பிற்பகல் 1.00 மணி முதல் 3.00 மணிவரை செல்லும் விதத்தில் தடைமுகாம்கள் திறந்திருக்கும் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி பல இளைஞர்கள் தமது மேற்படி வாகனங்களை ஆலயச் சூழலுக்குள் கொண்டுவந்து எம்பெருமானின் பக்திபூர்வ உற்சவத்தினை சீர்குலைக்கும் நோக்கோடு செயற்பட்டு வருவதும் தேவையற்ற விதத்தில் ஆலயச் சூழலில் தமது வாகனங்களை மிக வேகமாகச் செலுத்திவருவதும் எம் அனைவரினதும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாகவே எவ்வித இடர்களுமின்றி தளர்வுறாது நடைபெற்று வரும் நல்லைக் கந்தனின் உற்சவத்தினைப் பக்திபூர்வமாகவும் அமைப்பொழுங்கிலும் நடத்தும் விதத்தில் பின்வரும் நடைமுறைகள் உடனடியாகவே அமுலுக்கு வருகின்றன.

★ எம்பெருமான் வெளிவீதியுலா வரும் நேரமான பிற்பகல் 5-00 மணி முதல் 6-00 மணி வரையும் தடைமுகாம்களூடாக எவ்விதமான வாகனங்களும் செல்வதற்கும் அனுமதிக்கப்படமாட்டாது.

★ தடைமுகாம்களுக்குட்பட்ட இடங்களில் தேவையற்ற விதத்தில் குறிப்பாக பிற்பகல் 4-00 மணி முதல் 6-00 மணிவரையும் தரித்து நிற்கும் சகலவிதமான வாகனங்களும் அவை அனுமதி பெற்றிருப்பினும் [கூட எம்மால் பறிமுதல் செய்யப்பட்டு உரிய இடத்தில் ஒப்படைக்கப்படும்.

★ தடைமுகாம்களுக்குட்பட்ட இடங்களில் வதிவோரது அல்லது வியாபார நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களது துவிச்சக்கரவண்டிகளும் பக்தர்களின் நடமாட்டத்திற்கு இடையூறாக நிறுத்தப்படுமிடத்து அல்லது ஓடிச் செல்லுமிடத்து அவையும் எம்மால் பறிமுதல் செய்யப்படும்.

எம்பெருமானின் மகோற்சவம் அமைதியாகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற அனைத்து மக்களும் குறிப்பாக வாலிபர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பினை நல்கி ஆலயச் சூழலில் எவ்விதமான பிரச்சினைகளும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வார்கள் என உறுதியாக நம்புகின்றோம்.

ஒரு சிலர் செய்யும் தவறுகளால் அனைவரும் பாதிக்கப்படும் நிலையைத் தவிர்த்து முருகனின் திருவிழா என்பதை முதன்மைப்படுத்தி நாம் அனைவரும் செயற்பட்டால் ஒரு பொல்லாப்பும் இல்லை.

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


டொனால்ட் கணேஷகுமார்
வெற்றிக் கிண்ணம்

50 ஓவர்களைக் கொண்ட
கிரிக்கெட் சுற்றுப் போட்டியின்
இறுதிப் போட்டி
கே. சி. சி. சி. விளையாட்டுக் கழகம்
எதிர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
29 -- 08 -- 1999 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு
யாழ். மத்திய கல்லூரி மைதானம்

செயலாளர்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
(சி/8619)


## நல்லூர் ஆலய…

(9 ஆம் பக்கத் தொடர்)

வை. நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப்பட்டு வரும் திருத்தொண்டர் புராண தொடர் இசைச்சொற்பொழிவில் இன்று 'தென்திசைசெய்த மாதவம்' எனும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம் பெறும். (ஐ-க-30-103)


உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக!
திருநெல்வேலியில்
மங்களகரமான
புதுக்கடை திறப்பு விழா

அன்புடையீர்!
நிகழும் பிரமாதி வருடம் ஆவணி மாதம் 8 ஆம் நாள் (25 - 08 - 1999)
புதன்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் 9-00 மணிவரையுள்ள
சுப முகூர்த்த வேளையில்

ஸ்ரீ கணேஸ் உதிரிப்பாக விற்பனையகம்

என்னும் ஸ்தாபனம் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளதால்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மோட்டார் வாகனங்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகள்
ஆகியவற்றுக்கான சகல வகையான உதிரிப்பாகங்களையும்
ஒரே தடவையில், ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. ஜெகதீஸ்வரன்
(ஜெகன்)
இல. 784, பலாலி வீதி, திருநெல்வேலி.
(சி/8621)


# பத்திரிகை மீதான தாக்குதலுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 24

கடந்த சனிக்கிழமை இரவு 'உதயன்' அலுவலகம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை பல அமைப்புகள் தொடர்ந்து கண்டித்து வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:-

### ஈ. பி. ஆர். எல். எவ்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்று முன்தினம் உதயன் பத்திரிகைக் காரியாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

பத்திரிகை, நூல்நிலையம் மற்றும் புத்திஜீவிகள் மீதான தாக்குதல் படித்தவர்களைப் பெருந்தொகையாகக் கொண்ட எமது சமூகத்தில் பேரதிர்ச்சியூட்டும் சம்பவங்களாகவே இருக்கின்றன.

1981 இல் நூல்நிலையம் எரிக்கப்பட்டது ஒரு கலாசாரப் படுகொலை என வர்ணிக்கப்பட்டது. அடுத்து ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் எரிக்கப்பட்டது. இவை பேரினவாதத்தின் திட்டமிட்ட கொடூரச்செயல்களாகவே இருந்தன. தமிழ்மக்கள் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியவை இச்சம்பவங்கள்.

ஊடகத்துறையில் பணியாற்றியவர்கள் ஜனநாயக விரோத சக்திகளை விமர்சித்ததற்காகக்காணாமற்போயிருக்கிறார்கள்.

இன்று யாழ்ப்பாணத்து மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதற்கு உள்ளூரிலுள்ள ஒரேயொரு ஊடகமாக உதயனே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டாடப்பட்டிருக்கும் யாழ்ப்பாணத்துக்கு அது ஓர் அத்தியாவசிய தொடர்புச் சாதனமாகவே உள்ளது.

இந்தச் செயலில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அம்பலப்படுத்தப்படவேண்டும். யார் செய்தார்கள் என்பதைச்சொல்வதே இன்றுஎமது சமூகத்தில் தீராதவியாதி. இது நீலன் படுகொலையில் இருந்து உதயன் பத்திரிகை மீதான கைக்குண்டுத் தாக்குதல் வரை ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது.

பாதிக்கப்பட்டஉதயன் பத்திரிகையாளர் குடும்பத்திற்கு எமது உறுதியான ஆதரவை தெரிவித்துக்கொள்கின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்து சமயப் பேரவை

இந்து சமயப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டின் குரலாக ஒலிக்கும் உதயன் பத்திரிகை நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை எமது பேரவை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

இன்று மிகுந்த சோதனையோடு எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எமது மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை— துணிவாக - பத்திரிகா தர்மத்திற்கு முரண்படாத வகையில் —உதயன் எடுத்துச் சொல்லி, வெளியுலகை நீதியின் பால் நிலைத்திருக்கச் செய்கிறது. சோதனைகளின் போதெல்லாம் உதயனின் துணிவான செயற்பாட்டை நாம் எவரும்மறந்து விடக்கூடாது.

நீதி, நியாயம், சமத்துவம், சுதந்திரம், மதசார்பின்மை என்பவற்றை உதயன் கண்ணியத்தோடு பேணி வருவதை நாம் பாராட்டாமலும் இருக்கமுடியாது. எமக்குள்ள பிரச்சினைகளை வெளியுலகுக்குச் சொல்லவல்ல— குடாநாட்டில் இருக்கும் — ஒரே ஒரு பத்திரிகை உதயன் என்பதை இந்நேரத்தில் ஞாபகமூட்ட வேண்டிய நிலையிலுள்ளோம்.

இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை தயவுசெய்து பகைமை உணர்வை மறந்து இனிமேல் இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடாமல் இருக்குமாறு வேண்டுகிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வங்கி ஊழியர் சங்கம்

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வங்கிக் கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பலவிதமான நெருக்கடிகளின் மத்தியிலும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரேயொரு செய்தி இதழான உதயன் பத்திரிகை அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கும் விடுக்கப்பட்ட மற்றுமோர் அச்சுறுத்தலாகும். யாழ்ப்பாணத்தில் தமிழ்ச் செய்தித்துறைக்கு விடுக்கப்பட்ட இந்த ஆயுத அச்சுறுத்தல் இதற்கு முன்பும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ளது. தெளிவான சிந்தனையற்ற முறையில் நடத்தப்பட்ட இத்தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதுடன் அத்தாக்குதலின் போது காயமடைந்த தோழர்களான தொழிலாளர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

### தமிழர் ஆசிரியர் சங்கம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பத்திரிகா தர்மத்துடன் பலதரப்பட்ட செய்திகளை துணிச்சலுடன் வெளியிட்டு தமிழ் பத்திரிகை உலகில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்திருக்கும் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின்மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் மிகவும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும். அண்மையில் துணிச்சலான பத்திரிகை என்ற முத்திரையைப் பெற்ற உதயன் இனந்தெரியாதவர்களின் இத்தகைய தாக்குதலுக்கு உள்ளானது துரதிர்ஷ்டவசமானதாகும்.

இத்தகைய தாக்குதலினால் அதன் மிடுக்கோ துணிச்சலோ குறைந்துவிடக்கூடாது என்பதுதான் தமிழ் இனத்தின் அவாவாகும். இந்தத் தாக்குதல் சம்பவத்தை சகல அதிபர்கள், ஆசிரியர்கள் சார்பில் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

— எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தாக்குதல் குறித்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியாகும் ஒரேயொரு தமிழ்ப் பத்திரிகையான உதயன் மீது கடந்த சனியிரவு நடத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ. வி. எம். ராஜன்-புஸ்பலதா அன்பு வெள்ளம் இசை நிகழ்வு

## இன்று முதல் நடைபெறுகிறது

தென்னிந்தியாவின் பிரபல முன்னாள் நடிகர் ஏ. வி. எம். ராஜன், புஸ்பலதா குழுவினரின் ''அன்பு வெள்ளம்'' மாபெரும் நிகழ்ச்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் செப்ரெம்பர் 5 ஆம் திகதி வரை குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறவுள்ளன

இன்றும் நாளையும் காலை 11 மணிக்கு ஊர்காவற்றுறை திறந்தவெளியரங்கிலும்,—

26 ஆம், 27 ஆம் திகதிகளில் மாலை 3. 30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்திலும் —

28 ஆம், 29 ஆம் திகதிகளில் மாலை 3. 30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும்—

30 ஆம், 31 ஆம் திகதிகளில் மாலை 3. 30 மணிக்கு சாவகச்சேரி யூ. சீ. மைதானத்திலும்—

செப்ரெம்பர் முதலாம், 2 ஆம் திகதிகளில் மாலை 3. 30 மணிக்கு பருத்தித்துறை திக்கமுனை மைதானத்திலும்—

செப்ரெம்பர் 3 ஆம் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் மாலை 3. 30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிலும்—இந்த நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (இ-9)


# இந்துருவலி கப்பலில்

## பொருள்கள் ஏற்றும்

# வர்த்தகர்களின் கவனத்துக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை மற்றும் கொழும்புக்கு விவசாய உள்ளீட்டுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களையும் ஏற்றுபவர்கள் 26 ஆம் திகதிக்கு முன் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**வேல் ரேட் சென்ரர்**

114, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

T. P No. 2822 (68439)



# SPOKEN ENGLISH with GRAMMAR

Lectures By:

**Mr M. A. HARI**

புதிய பிரிவு I ஆரம்பம்

31 – 08 – 1999 செவ்வாய் மாலை 4–00 மணி.

TUESDAY / THURSDAY } 4 p.m. – 5 p.m.

புதிய பிரிவு II ஆரம்பம்

04 – 09 – 1999 சனி காலை 8–00 மணி.

SATURDAY / SUNDAY } 8 a.m – 9 a.m.

அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.

DIRECTOR

**HARY'S INSTITUTE**

KONDAVIL EAST, KONDAVIL.

(68438)


# இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ். சுண்டுக்குளி சம்றொக் அக்கடமி நடத்தும் சம்றொக் வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3 மணிக்கு கொய்யாத்தோட்டம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் றேடியன்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வில்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும்—

கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர். பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், தீவக வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் என். எஸ். ஏ. ஒஸ்வோல்ட் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (உ-7)

## ஆறுபேரை...

[முதலாம் பக்கத் தொடர்]

குழந்தை, இரண்டு பெண்கள் உட்பட ஆறுபேர் மரணமானதாகவும்—

பின்னர் அவர் தன்னைத் தாமே சுட்டுத் தற்கொலை செய்ததாகவும்—

தாக்குதலில் மேலும் ஒருவர் காயமடைந்ததாகவும்—

பொலீஸார் தெரிவித்தனர். (உ-6)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

குண்டே வெடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டு வெடிப்புக் காரணமாக பொலீஸ் நிலையக் கட்டடம் அதிர்ந்தது ஜன்னல்க் கண்ணாடிகள் நொருங்கி வீழ்ந்தன.

தாக்குதலால் பொலீஸாருக்கு எந்த உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-6-21)


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்!

நீ வருவாய்என

ரோஜா வனம்

பொன் விழா (பிரமிட் CD)

**வீடியோ விமல்**

யாழ்ப்பாணம்.

(சி/8620)


## 50 கலிபர்...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை கட்டுகஸ்தோட்டைச் சந்தியில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலீஸார் இந்த இராணுவக் கோப்ரலை சோதனையிட்ட போது அவரின் இடுப்பில் இருந்து 50 கலிபர் ரக ரவைகளை மீட்டனர் எனவும்—

அதன்பின்னர் பொலீஸார் அந்தக் கோப்ரலின் கம்பளையில் உள்ள வீட்டைச் சோதனையிட்டபோது அங்கிருந்து 61 விமான எதிர்ப்புக் குண்டுகளைக் கண்டெடுத்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜே. ஜி. விமலவன்ச என்ற இந்த இராணுவக் கோப்ரல் தற்போது பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (உ-7-21)

## இருவரைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

மாதம் 4 ஆம் திகதியிலிருந்து காணாமற்போய்விட்டதாகவும்—

யாழ். கண்டிவீதியைச் சேர்ந்த செல்வராசா துஷாந்தினி (வயது 14) கடந்த 21 ஆம் திகதி மாலை 5.00 மணியிலிருந்து காணாமற்போய் விட்டதாகவும்—

உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [உ-5-ரி]

## 1,200 பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதேநேரம் — இங்கிருந்து ஒரு தொகுதிப் பயணிகளுடன் இந்தக் கப்பல் நாளை மறுதினம் திருகோணமலை நோக்கிப் புறப்படும் என்றும்-

அதைத் தொடர்ந்து மற்றுமொரு சேவை நடைபெறும் வாய்ப்பு உள்ளது என்றும்—

யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது. (உ-3)

## 4 ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்)

பயண ஏற்பாடு செய்து தருமாறு இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்து வற்புறுத்த வேண்டாம் என்று அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

மரணம் மற்றும் அவசர சிகிச்சைக்குச் செல்வோர் அதற்கான ஆவணங்களுடன் சமுகமளித்தால் அவர்களது பயண ஏற்பாடுகள் தொடர்பாகப் பரீசிலிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

நாளை காங்கேசன்துறைக்கும் — திருகோணமலைக்கும் இடையில் கப்பல்சேவை இடம்பெறவிருக்கின்றது என்றும்—

எனவே பயணிகள் இந்தச் சேவையில் செல்ல விரும்பினால் இன்று முதல் டிக்கெட்டுக்களைப் பெறலாம் என்றும்—

அவர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார். (உ-2)

## மீளக்...

[முதலாம் பக்கத் தொடர்]

படையினர் கைப்பற்றிய போதும் அந்தப் பகுதியில் பொதுமக்கள் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

அந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாக விடுத்து வந்த கோரிக்கைகளின் பயனாக அந்தப் பகுதிகளில் மீளக்குடியமர வன்னிப் படைத் தலைமையகம் அனுமதி அளித்துள்ளது.

இந்த அனுமதியை அடுத்து அந்தப் பகுதி பொதுமக்கள் தமது வீடுகளுக்குச் சென்று காடுகளை வெட்டி சிறு கொட்டில்களை அமைக்க ஆரம்பித்துள்ளனர். (ஐ-164-3)

## 2 சிப்பாய்களின்...

[முதலாம் பக்கத் தொடர்]

ஆம் திகதி வவுனியா கூமாங்குளம் பகுதியில் கிரனேட்டை வெடிக்க வைத்து உயிரிழந்த இளைஞரது சடலம் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டது. (உ-6-164)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

சென்றனர்.

ஆனால் புலிகள் பிரதேசத்தில் இருந்து 13 அவசர நோயாளர்களைத் தவிர வேறு எவரும் இப்பாதை ஊடாக படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வர அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை முதல் பயணிகள் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்த இந்தப் பாதை நேற்றுத் திறக்கப்பட்டது. முதற் தடவையாக புலிகளின் பிரதேசத்தில் இருந்து சுமார் 600 பேர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்தனர்.

நாளை புதன்கிழமை மேலும் 500 பேரை புலிகள் அனுப்பிவைப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் அதற்குப் பின்னர் தொடர்ந்து புலிகள் பிரதேசத்தில் இருந்து வெளியேறுவதற்கு எவருக்கும் 'பாஸ்' வழங்கப்படவில்லை என்றும்—

இதுவரை வழங்கப்பட்ட பாஸ்கள் ரத்துச் செய்யப்பட்டன என்றும்—

நேற்று அங்கிருந்து வவுனியா வந்து சேர்ந்தவர்கள் தகவல் வெளியிட்டனர்.

இது மாங்குளம் பாதை தொடர்ந்து செயற்படுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. [உ-6-164]

## பத்திரிகை மீதான...

(11ஆம் பக்கத் தொடர்)

தப்பட்ட தாக்குதல் குறித்து விசாரணை நடத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றோம்.

பத்திரிகைச் சுதந்திரத்தை தங்கள் விருப்பத்திற்கு ஏற்ற படிபயன்படுத்த விரும்பிய அதிருப்திச் சக்திகளின் வேலையே இத்தாக்குதல் என நாம் கருதுகின்றோம்.

இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு ஜனநாயக விரோத சக்திகளால் நாட்டின் பத்திரிகைச் சுதந்ரம்—குறிப்பாக யாழ். குடாநாட்டில் — தாக்கப்படாமலும் துன்புறுத்தப்படாமலும் இருப்பதை உறுதிப்படுத்த திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# கஜமுகா ரேட் சென்ரர்

மொத்த சில்லறை வியாபார நிலையம்

போட்டோ ஸ்ரட் மெஷின் (Canon NP-1215)

T.V. டெக் Video CD டெக் Audio

Video CD Set Up Panasonic Rx றேடியோ

ஒகன் றம் செற் மற்றும்

ரெலிபோன் Panasonic Panapone வகைகளையும்

பிளாஸ்ரிக் கதிரைகள் வாளிகள் உட்பட

பிளாஸ்ரிக் வகைகளையும் C. I. C. தயாரிப்புக்களான

றபர் சிலிப்பர் (Ransirs) விவசாய இரசாயனங்கள்

உரம் தெளிகருவி விதைகள்

போன்ற உள்ளீடுகளையும் இவற்றுடன்

இசைப்பிரியர்களுக்கான புதிய பழைய இடைக்கால பாடல்கள், படங்களுக்கான

Audio CD (Ramy, King CD) Video CD

போன்ற யாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்

நியாய விலையில் பெற்றுக் கொள்ள

கஜமுகா ரேட் சென்ரர்
இல. 281, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. NO, 021-2049

பவானி ஸ்ரோர்ஸ்
இராஜ வீதி,
நீர்வேலி.
T. P. NO. 070-212363

[68357]



# A.V.M. ராஜன், புஸ்பலதா குழுவினர் பங்குபற்றும்

மாபெரும் கலை நிகழ்ச்சி

# அன்பு வெள்ளம்

இடம்: திறந்தவெளி அரங்கு,
ஊர்காவற்றுறை

இன்று (24-08-99) செவ்வாய்க்கிழமை

காலை 11–00 மணி (S.L.T)

பிரவேசம் இலவசம்.

(சி/8312)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org